வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.01.2024 திங்கட்கிழமை இதழ் : 15 பக்கங்கள் : 12

## பால் மாவின் விலையும் எகிறியது!

கொழும்பு, ஜன. 15

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

400 கிராம் பால் மா பைக்கெற்றின் விலை 30 ரூபாயாலும் ஒரு கிலோ பால் மா பைக்கெற்றின் விலை 75 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின்சாரக் கட்டணம் 1 ரூபாயே குறையும்

கொழும்பு, ஜனவரி 15

**இலங்கை மின்சார சபையின் யோசனைக்கு அமைய 3.34 வீதமே மின்சார கட்டணம் குறைவடைகின்றது.**

**இதன்படி, முதல் 30 அலகுகளுக்கான கட்டணம் ஒரு ரூபாயே குறைவடைகின்றது. இதேபோன்று, 31 - 60 அலகுகளுக்கு 2 ரூபாய் 50 சதமும், 61 - 90 அலகுகளுக்கு 2 ரூபாயும், 91 - 120 அலகுகளுக்கு 3 ரூபாயும் 121 - 180 அலகுகளுக்கு 2 ரூபாயும் குறைவடையும் என்று தெரியவருகின்றது.** 11




## சுகாதார துறையினர் நாளை பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஜன. 15

சுகாதாரத் துறையை சேர்ந்த தொழில்சங்கங்கள் நாளை செவ்வாய்கிழமை நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்துக்கு தயாராகி வருகின்றன.

தொழில்சங்கங்களின் தகவலின்படி, இந்த வேலை நிறுத்தத்தில் சுகாதாரத் துறையை சேர்ந்த 27 தொழில் சங்கங்கள் பங்கெடுக்கின்றன.

மருத்துவர்களுக்கான உதவித்தொகையை அரசாங்கம் உயர்த்தியிருந்தது. தங்களுக்கும் அவ்வாறான உத வித் தொகை கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே 11

## நாட்டில் 19.4 வீதத்தினர் மனநோயால் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 15

நாட்டில் 19.4 வீதத்தினர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக மக்களை பாதித்துள்ள நெருக்கடிகள், பிரச்னைகள் மற்றும் அடக்குமுறைகள் காரணமாகவே பெரும்பாலானோர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

தற்கொலைகள், குற்றச்செயல்கள் அதிகரிக்கவும் நாட்டின் அண்மைக்கால நெருக்கடிகள் காரணமாக அமைந்துள்ளன.

இதேநேரம், இளையோரில் 40 வீதத்தினர் தனிமை, பதற்றம் அல்லது தற்கொலை போன்ற மனநலப் பாதிப் புகளை எதிர்கொண்டுள்ளனர். உலகளவில் ஒப்பிடுகை யில் இது இரு மடங்கு 11



### கிளிநொச்சி வாய்க்காலில்
## இளைஞர்கள் இருவர் சடலங்களாக மீட்பு!

கிளிநொச்சி, ஜன. 15

கிளிநொச்சி - கோவிந்தன் கடை சந்தியில் வாய்க்காலில் இருந்து இளைஞர்கள் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டனர். விபத்தால் இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

நேற்று நள்ளிரவு இந்த விபத்து இடம்பெற்றதாக நம்பப்படுகின்றது. வீதியிலிருந்த வீதி சமிக்ஞை குறியீடுகளை உடைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிள் வாய்க்காலுக்குள் பாய்ந்துள்ளது. மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், கல்மடுவை சேர்ந்த தயாளன் தனுசன் (வயது 20), அழகாபுரியை சேர்ந்த கிருஷ்ணன் சதீசன் (வயது 18) ஆகிய இருவரே உயிரிழந்தனர். 11

## எமது நாட்டின் எதிர்காலத்துக்காக ஒரு தாய் மக்களாக முன்னேறுவோம்!

### பொங்கல் வாழ்த்தில் ஜனாதிபதி



கொழும்பு, ஜன. 15

நாட்டின் எதிர்காலத்துக்கான புதிய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு தாய் மக்களாக முன்னேற்றம் அடைய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த தைப் பொங்கல் வாழ்த்து செய்தியில் குறிப்பிட் டுள்ளார்.

உழவர் திருநாளான தைத் திருநாள், மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூகத்தால் கொண்டாடப்படும் ஒரு செழிப்பான அறுவடைத் திருவிழாவாகும். 11

## டெங்கு பரவல் கட்டுப்பாட்டில் கொழும்பிலிருந்து வந்த குழு!

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாணத்தில் டெங்கு தொற்று தீவிரமாகப் பரவி வருகிறது. இந்த நிலையில், அதனை கட்டுப்படுத்தும் பணியில் கொழும்பிலிருந்து வந்த தேர்ச்சி பெற்ற குழு நேற்று கடமைகளை ஆரம்பித்தது.

கொழும்பு உட்பட பல்வேறு மாவட்டங்களிலும் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள மருத்துவர்கள் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு நிபுணர்களுடன் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் 11

## 42,248 சந்தேகநபர்களின் பட்டியல் பொலிஸாரிடம்!

### கைது நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 15

நாடளாவிய ரீதியில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42 ஆயிரத்து 248 நபர்களின் விரிவான பட்டியலை பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அனைத்து பொலிஸ் நிலையங்களின் குற்றச் செயல்களுக்கு பொறுப்பான அதிகாரிகளிடம் கையளித்துள்ளார்.

இந்த சந்தேகநபர்களை கைது செய்யும் பணி யுக்திய நடவடிக்கையுடன் இணைந்ததாக நேற்று ஆரம்பமானதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த பட்டியலில் 35 ஆயிரத்து 505 பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களும், கைரேகைகள் மூலம் அடையாளம் காணப்பட்ட 4 11

## நாட்டின் அதிகாரம் மிக்கவர்களே தேவாலயத்தில் குண்டு வைத்தனர்!

### கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜன. 14

கொழும்பு - பொரளை சகல புனிதர்கள் தேவாலயத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கைக்குண்டை வைத்தவர்கள் நாட்டின் அதிகார மிக்கவர்கள் என்று கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சாடியுள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்கு நியாயம் கேட்ட போராட்டத்தை அச்சுறுத்தும் நோக்கில் இது செய்யப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதி பொரளை சகல புனிதர்கள் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு மீட்கப்பட்டது. இது சம்பந்தமாக தேவாலயத்தின் ஊழியர் உட்பட நான்கு பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்படவில்லை என கத்தோலிக்க திருச்சபை குற்றம் 11

## யாழ். வருகிறார் நீதி அமைச்சர்!

யாழ்ப்பாணம்,ஜன. 15

நீதி மற்றும் சிறைச் சாலைகள் புனர்வாழ்வு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று முற்பகல் 10 மணிக்கு காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நடைபெறவுள்ள தேசிய நல்லிணக்க பொங்கல் விழாவில் பங்கேற்கவே அவர் வருகின்றார். 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராடுவோம்

## கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளனம்

யாழ்ப்பாணம், ஜன. 15

**இந்தியத் தூதரக அதிகாரிகள் எமது பிரச்னைகளை இந்திய அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி இழுவைப்படகுகளைக் கட்டுப்படுத்தவேண்டும். இல்லையேல் விரைவில் யாழிலுள்ள இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் மேற்கொள்வோம்- என்று யாழ்.மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புகளின் சம்மேளன செயலாளர் அன்ரன் செபராசா தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் வடக்கு கடற் பகுதிக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய இழுவைப் படகுகளால் கடல் வளங்கள் அழிக்கப்படுகின்றன. இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்தும் அழிக்கப்படுகின்றது. இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த இரு நாட்டு அரசாங்கமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் இலங்கை அரசாங்கம் செங்கடலை பாதுகாக்க இலங்கைக் கடற்படை கப்பலை அனுப்புகின்றது.

இலங்கைக்கு பொருட்கள் கொண்டுவரப்படும் கடலை பாதுகாக்க வேண்டியது முக்கியம் தான். எனினும், மக்களின் வாழ்வாதாரத்தையும் இலங்கை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

இங்கிருக்கக்கூடிய மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றி இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றனர். இந்தியத் தூதரக அதிகாரிகள் எமது பிரச்னைகளை இந்திய அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி இழுவைப்படகுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் விரைவில் யாழிலுள்ள இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் மேற்கொள்வோம். - என்றார். (ஐ)

# ஜனரஞ்சக அரசியலை ஜே. வி. பி. கட்டியெழுப்ப தயாராகவேண்டும்!

## இப்படி கூறுகிறார் வாசுதேவ

கொழும்பு, ஜன. 15

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு எதிராக முதலில் அரசியல் கூட்டணியை உருவாக்கத்தில் ஜே. வி. பி. இருக்க வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸவும் உதய கம்மன்பிலவும் அவ்வாறான தொரு கூட்டணியை அமைப்பதற்கு எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தற்போது பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். இதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளே காரணம் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு எதிரான முகாமில், ஜே. வி. பி. அதிக மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளதுடன் ஜனரஞ்சக அரசியலைக் கட்டியெழுப்புவதில் அந்தக் கட்சி கவனம் செலுத்தவேண்டும் - என்றார்.

# எல்லைமீறி காரைநகர் வந்த 12 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 15

காரைநகரிலுள்ள கோவிலான் கரையை அண்மித்து இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மூன்று இந்திய இழுவை படகுகளும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களும், மீன்பிடி இழுவைப் படகுகளும் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், மேலதிக நடவடிக்கைகளுக்காக காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

# ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி!

யாழ்ப்பாணம், ஜன. 15

பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தால் நடத்தப்படும் மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.

நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் தரம் 02 மற்றும் அதற்கு உட்பட்டவர்களும் (வயது 5 - 7) பிரிவு - 01 ஆகவும், தரம் 03 தொடக்கம் தரம் 05 வரையானோர் (வயது 8 - 10) பிரிவு - 02 ஆகவும், தரம் 06 தொடக்கம் தரம் 08 வரையானோர் (வயது 11 - 13) பிரிவு - 03 ஆகவும், தரம் 09 தொடக்கம் தரம் 11 வரையானோர் (வயது 14 - 16) பிரிவு - 04 ஆகவும் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர்.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது என்பதுடன், போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கல்வி கற்கும் தரம், பாடசாலை ஆகிய விபரங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர், மறுமலர்ச்சி மன்றத்தில் நேரடியாகக் கையளிக்கவோ, (தொடர்பு - இரவிச்சந்திரன் 076 278 2131) அல்லது 077 002 7621 என்ற இலக்கத்துக்கு வட்ஸ் அப் ஊடாக அனுப்பிவைக்கவோ முடியும். (ஐ)

# உலகத்தை வென்று இலங்கையை கட்டியெழுப்பும் தலைவர் ரணிலே!

## வஜிர அபேவர்த்தன இப்படி புகழாரம்

கொழும்பு, ஜன. 15

உலகை வென்று இலங்கையைக் கட்டியெழுப்பும் ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட மாநாடு காலி மாநகர சபை மண்டபத்தில் பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தலைவராக போட்டியிட வேண்டும் என்ற பிரேரணை வஜிர அபே வர்த்தனவால் மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. இதனை, கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக பிரேரணையை நிறைவேற்றினர்.



இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் மருத்துவராக இருப்பதற்கும் நாட்டின் தலைவராக இருப்பதற்கும் தகுதிகள் அவசியம். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி இலங்கை முழுவதும் இவ்வாறான மாநாடுகளை நடத்தி இந்தப் பயணத்துக்கு ஆதரவளிக்க ஜனாதிபதி தயாராக இருக்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தப்பியவர்களில் 15 பேர் தலைமறைவு

கொழும்பு, ஜன. 15

கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச் சென்றவர்களில் 15 கைதிகள் தவிர்ந்த ஏனைய அனைவரும் சரணடைந்துள்ளனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும், புனர்வாழ்வு நிலையத்தின் செயற்பாடுகள் வழமை போன்று தற்போது முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கந்தகாடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டது. இதில், 25 பேர் காயமடைந்தனர். 64 பேர் தப்பியோடினர்.

காயமடைந்தவர்களில் 5 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




இந்த நிலையில், தப்பியோடியவர்கள் மீண்டும் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர். எனினும், 15 பேர் இதுவரை சரணடையவில்லை. அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# 3 கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதையுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 15

மூன்று கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 30 வயதுடைய வத்தளைப் பகுதியைச் சேர்ந்தவர் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

நேற்று சனிக்கிழமை இரவு புத்தளம் இராணுவப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளார் .

குறித்த நபர் கற்பிட்டியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸொன்றில் ஐஸ் போதைப்பொருளை கொண்டு சென்று பாலாவி பகுதியில் இறங்கி மற்றொரு பஸ் ஒன்றில் போதைப்பொருளை கொண்டு சென்றுள்ளார்.

அந்த பஸ்ஸை மறித்து சோதனையிட்ட பொலிஸார் அவரால் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 3 கிலோ ஐஸ் போதைப்பொருளை கைப்பற்றினர். இதன் பெறுமதி சுமார் 3 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

# சிறுவன் துஷ்பிரயோகம்; நடன ஆசிரியர் கைது!

கொழும்பு, ஜன. 15

சிறுவன் ஒருவனைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றம் தொடர்பில் நடன ஆசிரியர் ஒருவர் பிலியந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - பிலியந்தலை பெலன்வத்தை பகுதியில் வகுப்பு முடிந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்த சிறுவனை நடன ஆசிரியர் மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்றுள்ளார். அந்த சமயமே அவரை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

சந்தேகநபரை கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
15.01.2024 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், தை 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கொழும்பின் இராஜதந்திரம்

தேர்தல் மேடைகளில் சம்பந்தன் ஒரு விடயத்தை அடிக்கடி கூறிவந்தார் - அதாவது, “நாங்கள் ஓர் இராஜதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்”, ஆனால், யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில்கூட அரசியல் ரீதியில் எந்தவொரு முன்னேற்றத்தையும் சம்பந்தன் அணியால் நிரூபிக்க முடியவில்லை. இந்த இடத்தில் எழும் கேள்வி - சம்பந்தனின் இராஜதந்திர போராட்டத்துக்கு என்ன நடந்தது? ஒன்றில் இராஜதந்திரம் புரியவில்லையா அல்லது கொழும்பின் இராஜ தந்திரத்துக்கு ஈடுகொடுக்க முடியவில்லையா?

கடந்த பதினான்கு வருடங்களாக தமிழ்த் தேசிய தரப்புகள் - அதாவது நாட்டுக்குள்ளும் நாட்டுக்கு வெளியிலும் இயங்கிவரும் தமிழ்த் தேசிய தரப்புகளின் பிரதான கோஷமாக இருந்தது - இருப்பது, இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள்தான்.

இந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளில் ஈடுபடுவதாகவே அனைத்துத் தரப்புகளும் கூறிக்கொண்டன - குறிப்பாக, இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், இன்று அரசாங்கம், செங்கடலில் இலங்கை கடற்படையை நிறுத்துவதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. தெற்காசியாவில் எந்தவொரு நாடும் உடனடியாக இவ்வாறானதோர் அறிவிப்பை வெளியிடவில்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே இந்த நகர்வை முன்னெடுத்திருக்கின்றார்.

தற்போது செங்கடலில், ஹவுதி ஆயுத அமைப்பு வர்த்தக கப்பல்களை இலக்கு வைத்துத் தாக்கிவருகின்றது. இந்திய கப்பல்களும் தாக்கப்பட்டுள்ளன. இதற்கு பதிலடியாக, அமெரிக்க மற்றும் பிரித்தானியா செங்கடல் பகுதியில் ஹவுதி அமைப்பை அழிக்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றது. இந்திய கப்பல்கள் தாக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பகுதியில் இந்திய கடற்படையும் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்தில், அவர்களுக்கு ஆதரவாக இலங்கை கடற்படையும் நிலைகொள்ளவுள்ளது. இதன் மூலம் சுதந்திரமான சர்வதேச கடல் போக்குவரத்தை பாதுகாக்கும் பணியில் இலங்கை கடற்படை ஈடுபடவுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் இது முக்கிய இராஜதந்திர நகர்வாகும். இலங்கைமீதான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் காலப்போக்கில் காணாமல் போவதற்கான வாய்ப்பே அதிகமுள்ளது. இலங்கையின் இராஜதந்திர நகர்வுகளே அதற்கான காரணமாகும்.

கொழும்பின் இராஜதந்திரத்துக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஆளுமையுடன் தமிழ்த் தலைவர்கள் என்போர் இல்லை. பலத்தை நிரூபிக்க முடியாதவர்கள் இராஜதந்திர அரசியலை கையாள முடியாது. அப்படியொரு கூற்றுமுண்டு. உலகெங்கும் இராஜதந்திரத்தை கையாள்பவர்கள் பலத்தின் அடிப்படையில்தான் அவர்களுக்கான இராஜதந்திர வெளியை உருவாக்கிக் கொள்கின்றனர். ஆனால், ஈழத் தமிழர் அரசியலில் மட்டும்தான் எந்தவொரு பலத்தையும் நிரூபிக்காமல் இராஜதந்திர போரில் ஈடுபடுவதாகக்கூறும் அவலம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

கடந்த பதினான்கு வருடங்களாக தமிழ்த் தலைவர்கள் என்போர் செய்து கொண்டிருந்தது ஒன்றுதான் - அதாவது, தூதரகங்களில் முறையிடுவது. ஆனால், அவ்வாறான முறைப்பாடுகளுக்கு பின்னரும்கூட, கடந்த பதினான்கு வருடங்களாக எந்தவொரு முன்னேற்றத்தையும் காண்பிக்க முடியவில்லை - அவ்வாறாயின் - தமிழர் தரப்புகளின் முறைப்பாடுகளை ஒரு பொருட்டாகவே அவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதானே பொருள். புலம்பெயர் ‘லொபி’ தோற்றுவிட்டது என்பதுதானே பொருள். ஏனெனில், தமிழரின் அரசியல் நகர்விலுள்ள அடிப்படையான தவறு இந்தியாவை விட்டுவிட்டு வேறு இடங்களில் தீர்வை தேடுவதில்தான் ஆரம்பிக்கின்றது. தமிழர் இராஜதந்திரம் செய்ய வேண்டிய இடம் இந்தியாவாகும். இதனைப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப நகர்வுகளை முன்னெடுக்கும்போது மட்டும்தான், தற்போதைய நிலையிலிருந்து ஒரு படியாவது முன்னோக்கி நகர முடியும்.

# நன்றி பகரும் பொங்கல் பண்டிகை

வி.ரி.சகாதேவராஜா



பொங்கல் என்பது விவசாயத்துக்கு மிகவும் இன்றியமையாத சூரிய பகவானுக்கு நன்றி சொல்லும் விதமாக ஏற்படுத்தப்பட்டது. அதனால், அன்று வீட்டு வாயிலில் அல்லது பூஜை அறைகளில் சூரியனின் வடிவத்தைக் கோலமாக வரை வது நல்லது. சூரியனுக்கு பொங்கல் நிவேதிக்கப்படும் என்பதாலும் கண்ணால் நம்மால் காணமுடிந்த கடவுள் சூரியன் என்ப தாலும் வீட்டு வாயில்களில் சூரியனின் கண் பார்வையிலேயே பொங்கலிடும் வழக்கம். இன்றும்கூட கிராமப்புறங்களில் அவை அனுசரிக்கப்படுகின்றன. நகரத்தில் இருப்பவர்கள் பொங்கல் செய்து அதனை சூரியன் கண்ணில் படும் இடங்களான பால்கலி அல்லது மொட்டை மாடியில் கோலமிட்டு மற்ற பொருட்களையும் வைத்து சூரியனுக்கு சர்க்கரைப் பொங்கலை நிவேதனம் செய்யலாம்.

வெறும் பொங்கல் மட்டுமே நிவேதனப் பொருள் அல்ல. ஒரு முறத்தில் பூசணிக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், கிழங்கு வகைகள், பனங்கிழங்கு, கரும்பு போன்ற பொருட்களையும் வைத்து நிவேதனம் செய்யவேண்டும். முற்றத்தில் வைத்த காய்கறிகளை கொண்டு அன்று சமையல் செய்ய வேண்டும். அப்படி செய்தால் சூரியனின் அருளைப் பெற்று ஆண்டு முழுவதும் பலமும், நலமும் பெற்று நலமாக வாழலாம் என்பது ஐதிகம்.

தை மாதப் பிறப்பே பொங்கல் என்று சிறப்பிக்கப்படுகிறது. அன்று சூரியன் மிகச் சரியாக மகர ராசியில் பிரவேசிக்கும் நேரத்தை அனுசரித்து பொங்கல் பானை வைப்பது வழக்கம். பானையின் கழுத்தில் மஞ்சள் குலை, சிறிய கரும்பு துண்டு ஆகியவற்றைக் கட்டி பானையில் புதிய அரிசியைப் போட்டு சிறிது பாலும் ஊற்றி பொங்கலிட வேண்டும். பானையிலிருந்து பாலும், அரிசியும் கலந்த நீர் பொங்கி வழிவது மிகவும் நல்ல சகுனமாகவும், வளத்துக்கு அறிகுறியாகவும் கருதப்படுகிறது. எந்த திசையை நோக்கி பொங்கி வழிந்தது என்பதை வைத்து அந்த ஆண்டுக்கான பலனைச் சொல்பவர்களும் உண்டு. பொதுவாகக் கிழக்கு திசை நோக்கி பொங்கி வழிதல் மிகவும் சுபமாகக் கருதப்படுகிறது. அதனால்தான், பொங்கலன்று ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது பால் பொங்கியதா எனக் கேட்கும் வழக்கமும் உருவாயிற்று.

**போகிப் பொங்கல்**

தை மாதப்பிறப்புக்கு முந்தைய நாளே போகி என்று அழைக்கப்படுகிறது. இந்திரனுக்கு போகி என்று ஒரு பெயர் உண்டு. மழை, மேகம், காற்று போன்றவைகளுக்கு இந்திரனே தலைவன் என்பதால் முதல் நாள் இந்திரனுக்கு நன்றி சொல்லும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்றே வீட்டு வாசல்களில் அழகான மாக்கோலம் வரைந்து தேவர்கள் தலைவனுக்க மரியாதை செய்வார்கள். அறுவடைக் காலம் என்பதால் அந்த ஆண்டும் நெல்லும், பருத்தியும், கடலையும் வீட்டை நிறைத்திருக்க வேண்டும் என்பதற்காக பழைய பொருட்களைக் களைந்து புதிய அறுவடைப் பொருட்களுக்கு இடம் கொடுப்பார்கள். நம் மனதில் உளள பழைய எண்ணங்களான பொறாமை, கோபம், பேராசை போன்றவற்றை நெருப்பிலிட்டுப் பொசுக்கி, புதிய மனிதர்களாக நாம் மாறவேண்டும் என்பதே இதன் தத்துவம்.


**மாட்டுப் பொங்கல்**

மாட்டுப் பொங்கலுக்குப் பின்னால் சுவையான புராணக் கதை ஒன்று இருக்கிறது. ஒருமுறை சிவபெருமான். தனது பூத கணத்தில் ஒருவனான பசவன் என்பவனை அழைத்து உலக மக்களிடம் வாரம் ஒரு முறை உணவு உண்ணவேண்டும். தினமும் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும் என்று அறிவித்து வரச் சொன்னார். ஆனால் பசவனோ தினமும் உண்ணவேண்டும், வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டான். இதனால் கோபம் கொண்டு சிவபெருமான், பசவனுக்கு சாபம் கொடுத்து விட்டார். அது என்ன தெரியுமா? “உன்னால் மக்களுக்கு அதிக உணவின் அவசியம் ஏற்பட்டு விட்டது. ஆகையால் நீ எருதாகவும் உன் மனைவி பசுவாகவும், பிறந்து நிரந்தரமாக பூமியில் வசிப்பாய்! மக்களுக்கு உணவுப் பொருளை உற்பத்தி செய்ய நீ கடுமையாக உழைக்கவேண்டும்“ என்று சொல்லிவிட்டார்.

வருத்த்தில் ஆழ்ந்தான் பசுவன். இறைவனைப் பிரிந்து வாழவேண்டுமே என்று அவன் மனம் வெம்பியது. அவனது நிலை கண்ட சிவபெருமான். மனம் இரங்கினார். “கவலை வேண்டாம் பசவா! ஆண்டுக்கொரு முறை மக்கள் உனக்கு நனறி செலுத்துவார்கள். சுவையான உணவுப் பொருட்கள் அளித்து உன்னை அலங்கரித்து மரியாதை செலுத்துவார்கள். உன் மனைவியான பசுவிற்கு எப்போதும் பூஜைகள் செய்வார்கள். அப்படிச் செய்பவர்களுக்கு நான் எல்லா வளமும், வற்றாத செல்வமும் அளிப்பேன். அதோடு உமையன்னையும் நானும் உங்களை நாடி வந்து நலன் விசாரிப்போம்“ என்றார். அதனால் ஆறுதல் அடைந்த பசுவன் அப்போதே தன் மனைவியுடன் காளை மாடாகவும், பசுவாகவும் பூமியில் பிறந்தான். அவனுக்கு சிவபெருமான் அளித்த வாக்கின்படியேதான் இன்றுவரை மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

மாடு இல்லாதவர்கள் கோசாலைக்கோ மாடு வைத்திருப்பவர்கள் வீட்டுக்கோ சென்று பசுவிற்கு பூஜை செய்தால் இறைவன் மனம் மகிழ்ந்து, நம் வாழ்வில் மங்களம் நிலைக்கச் செய்வார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜனவரி - 15 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - தை 01**
**நல்ல நேரம் : 06.00 - 07.30**
**ராகு காலம் : 07.30 - 09.00**
**திதி : பஞ்சமி**



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் அலைச்சலும் இருக்கும். வியாபாரத்தில் ஒத்துழைப்பு குறையும். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**கடகம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். புது தொழில் தொடங்குவீர்கள். வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்களை மாற்றுவீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கன்னி**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். அனாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் பழைய சிக்கல்கள் தீரும். கனவு நனவாகும்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான சலுகைகள் மூலம் போட்டிகளை சமாளிப்பீர்கள். புதிய சலுகைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**தனுசு**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். வாகனத்தை சீர்செய்வீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
சந்திரன் ராசிக்குள் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
எடுத்த வேலையை முழுமை யாக முடிக்க முடியாமல் அவதிக்குள்ளாகினர். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரக்கூடும். சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.

**மீனம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் நவீன உத்திகளைக் கையாளுவீர்கள். உத்யோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

# தி. மு. க. கூட்டணி தொகுதி பங்கீடு பேச்சுகள் இந்த வாரம் ஆரம்பமாகும்!

**சென்னை, ஜன. 15**

**தமிழ்நாட்டில் தி. மு. க. தலைமையிலான கூட்டணியின் பாராளுமன்றத் தேர்தலுக்கான தொகுதி பங்கீடு பேச்சு இந்த வாரம் ஆரம்பமாகிறது.**

'இந்தியா' கூட்டணியின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்ற முதல்வர் ஸ்டாலின் பொங்கல் திருநாளுக்கு பின்னர் பேச்சு ஆரம்பிக்கப்படும் தெரிவித்திருந்தார். இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ் சார்பில் கார்கே பங்கேற்றார். சிவசேனா, சமாஜ்வாடி, ராஷ்டீரிய ஜனதா தளம், கம்யூனிஸ்ட் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

தி. மு. க. சார்பில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் இந்தக் கூட்டத்தில் காணொலி காட்சி மூலம் பங்கேற்றார். இந்நிலையில், ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழகத்தில் பொங்கல் பண்டிகைக்கு பிறகு தொகுதிப் பங்கீடு பேச்சு தொடங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். (ஐ)

# வேட்பாளரை அறிவித்தது நாம் தமிழர்!

*சென்னை, ஜன. 15*

நாம் தமிழர் கட்சியின் பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. அந்தக் ட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக விரிவாக விவாதிக்கப்பட்டது.

இதனையடுத்து, தென் சென்னை பாராளுமன்ற தொகுதி வேட்பாளராக பேராசிரியர் தமிழ்ச்செல்வி அறிவிக்கப்பட்டுள்ளார். விரைவில் 39 தொகுதி வேட்பாளர்களும் அறிவிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் சீமான் பேசுகையில்,

மாவட்ட நிர்வாகிகள் நியமனத்தில் சிலர் புரிந்து கொள்ளவில்லை. முதல்கட்ட தலைவர்களே இல்லாதபோது இரண்டாம் கட்ட தலைவர் என்பதா? தலைவருக்கு என்ன தகுதி உள்ளது. கட்சி தொடங்குவது எளிது தொடர்வது என்பது கடினமானது - என்றார். (ஐ)



# போகி பண்டிகை கொண்டாட்டம் தமிழ்நாட்டில் புகைமூட்டம்!

## சென்னையில் விமான சேவைகள் பாதிப்பு

*சென்னை, ஜன. 15*

தமிழகத்தில் போகி பண்டிகை நேற்று கொண்டாடப்பட்டது. பண்டிகையை முன்னிட்டு மக்கள் பழைய பயனற்ற பொருட்களை எரித்து போகி பண்டிகையை வரவேற்று வருகின்றனர்.

இதன்படி, சென்னையின் பல்வேறு பகுதிகளில் மக்கள் போகி கொண்டாடினர்.

பழைய பொருட்களை எரித்து போகி பண்டிகை கொண்டாடியதால் சென்னையில் புகைமூட்டம் அதிகரித்துள்ளது. சராசரி அளவை விட புகைமூட்டம் அதிகரித்து காணப்படுவதால் வாகன சாரதிகள் அவதியடைந்தனர்.

இந்தப் புகைமூட்டத்தால் நேற்று காலையில் 16 உள்நாட்டு விமான சேவைகள், 8 வெளிநாட்டு விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. (ஐ)


# தமிழர் வீரத்தை பறைசாற்றும் வகையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவும் அரங்கம்

*அலங்காநல்லூர், ஜன. 15*

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை நினைவுகூரும் வகையில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் பிரமாண்டமாக ஜல்லிக்கட்டு மைதானம் கட்டப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டிக்கு புகழ்பெற்ற இடமாக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் திகழ்கிறது. இங்கு திரளும் பார்வையாளர்களுக்கு அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியிடம் போதுமானதாக இல்லை. இதனால், தமிழ்நாடு அரசு 66 ஏக்கர் பரப்பளவில் 44.6 கோடி (இந்திய) ரூபாய் மதிப்பில் 'கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்' என்ற பெயரில் அரங்கத்தை அமைத்தது. பழமை மாறாமல் மன்னர் காலத்து அரண்மனை போல் இந்த ஏறு தழுவுதல் அரங்க முகப்பு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஜல்லிக்கட்டு அரங்கில் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவமனை, காத்திருப்பு கூடம், சுகாதார நிலையம், வாடி வாசல், அலுவலகம், தற்காலிக விற்பனை கூடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, 50 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தண்ணீர் தொட்டி, மருந்தகம், கால்நடை மருத்துவ வசதி, கழிப்பறை, பத்திரிகையாளர் அறை, அலுவலர்கள் ஓய்வு அறை, என அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன



இந்த பிரம்மாண்ட ஜல்லிக்கட்டு அரங்கில் சுமார் 10, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அமர்ந்து விளையாட்டை கண்டு ரசிக்கும் வகையில் பிரம்மாண்டமான முறையில் சுமார் 20 அடி உயரத்திற்கு மேல் அமர்ந்து பார்க்கும் வகையில் கண் கவர் வேலைப்பாடுகளுடன் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

பறைசாற்றும் வகையிலே இந்த மைதானத்தை தமிழக முதல்வர் இந்த மாத இறுதியில் திறந்து வைக்கிறார். திறப்பு விழா நாளில் உலகத் தரத்தில் மிக பிரமாண்டமாக இந்த அரங்கில் ஜல்லிக்கட்டு நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# பொங்கல் வாழ்த்து செய்திகள்



## நல்லிணக்கம், ஒற்றுமையை வலுப்படுத்தும் பொங்கல்!




**பி. எஸ். எம். சார்ள்ஸ்,
வடக்கு மாகாண ஆளுநர்.**

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் நெற்செய்கையில் ஈடுபடும் உழவர்களின் திருநாளாம் தைப்பொங்கலை கொண்டாடும் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றேன்.

நெற்செய்கையில் ஈடுபடும் மக்கள் தமக்கு உதவிய இயற்கை தெய்வமாகிய சூரியனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் முகமாக பொங்கல் பொங்கி வழிபாடுகளை மேற்கொள்வது மரபு. அந்தவகையில், எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நெற்செய்கை பெரும் பங்காற்றுகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இயற்கை அனர்த்தங்களாலும் ஏனைய சில செயல்பாடுகளாலும் நெற்செய்கையில் ஈடுபடுவோர் பெரும்சவால்களை எதிர்நோக்குகின்றமை கவலைக்குரியதே. எனினும், நாட்டு மக்களின் பசியை போக்க தாம் எதிர்நோக்கும் சவால்களை முறியடித்து உரிய விளைச்சலை பெற்று விவசாய துறைக்கு பெரும் உதவி புரியும் அனைவரையும் கௌரவித்து வாழ்த்துவதற்கான நாளாக இன்றைய தைப்பொங்கல் தினம் அமைந்துள்ளது.

மரபுசார்ந்த வழிபாடுகளுடன், இன நல்லிணக்கம், மத ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையில் இன்றைய நாளில் முன்னெடுக்கப்படும் ஏனைய கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளும் வரவேற்கப்படக்கூடியவை. அந்தவகையில் நாட்டின் முன்னேற்றம், சுபீட்சம் ஆகியவற்றுக்காக தம்மை அர்பணிக்கும் அனைவருக்கும் மீண்டும் தைத்திருநாள் வாழ்த்துகளை தெரிவிப்பதில் அகமகிழ்வடைகின்றேன்.

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. -
( குறள் எண் 1031)



**கலாநிதி ஆறு. திருமுருகன்
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம்**

## பண்பாட்டையும் தாய்மொழியையும் பாதுகாத்திட சகலரும் முன்வாருங்கள்

சைவத்தமிழ் மக்களின் பண்டிகைகளில் தைப்பொங்கல் விழா முதன்மையானது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு பொங்கிப்படைத்து நன்றி சொல்லுவதுடன், பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி கூறும் நாளாக இந்நாள் கருதப்படுகிறது.

முற்றத்தில் குடும்பமாக பொங்கிப் படைத்து உறவினர், நண்பர்களுக்கு உணவை பகிர்ந்து அன்பைப் பெருக்கும் பண்பாட்டு நாளாக தைத்திருநாளை எம்முன்னோர் காத்து வளர்த்தனர். எனவே, அனைத்து மக்களும் வீட்டு முற்றத்தில் பொங்கிப் படையுங்கள். எமது பாரம்பரியமான இவ்விழாவைச் சிறப்பாகப் பேணி எமது தலைமுறை பின்பற்ற வழி செய்யுங்கள்.

எங்கள் மண்ணில், நீதியும், நிம்மதியும் நிலவ இறைவனை வேண்டுங்கள். பாடுபட்டு உழைப்பவர்களுக்கு மத்தியில் பணத்தைத் தேட போதைப் பொருட்களில் ஆர்வம் கொள்ளும் அநியாயம் அற்றுப்போக கடவுளை வேண்டுவோம்.

எங்கள் பாரம்பரியமான பண்பாட்டையும் தாய் மொழியையும். கலைகளையும் காத்திட சகல அமைப்புக்களும் பயன் நிறைந்த விழாக்களை ஏற்பாடு செய்து சமூகத்தை ஆற்றுப்படுத்துங்கள்.

வைத்தியசாலைகளிலும், சிறைக்கூடங்களிலும் துன்புறும் மக்கள் நன்மை பெற இந்நாளில் பிரார்த்தியுங்கள். அனைத்து அன்பர்களுக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்தினையும் நல்லாசிகளையும் அமைகிறேன்.

## அனைவருக்கும் சகல செல்வங்களும் கிட்டட்டும்!



**சிவாகம கலாநிதி. சிவஸ்ரீ.
கு. வை. க. வைத்தீஸ்வர குருக்கள்
இந்துக் குருமார் அமைப்பு**

தமிழ் மக்களின் அறுவடைப் பண்டிகை விழாவாக, உழவர் திருநாளாக தைத்திருநாள் காணப்படுகிறது.

சமய ரீதியாக நாம் பார்க்கும் போது எம்மிடம் இல்லாதது எதுவும் இல்லை. வாழ்வியலின் அடிப்படைகளாக சமய நெறி காணப்படுகிறது. அன்பினையும் பண்பினையும் நனி நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் பாங்கினையும் அறச்சிந்தனைகளுடன் தர்மத்தினை போதித்து நிற்கிறது.

இவ்வகையில்தான் உழவர் பெருமக்கள் சூரிய பகவானுக்கும் தொடர்ந்து விவசாயத்திற்கு உதவிய கால்நடைகளுக்கும் நன்றி பகிர்ந்து கொள்ளும் பாங்கினையும் உணர்த்துவதாக காணப்படுகிறது.

எமது சங்க இலக்கியங்களான
"தைஇத் திங்கள் தண்கயம் படியும்"
என்று நற்றிணையிலும்
"தைஇத் திங்கள் தண்ணிய தரினும்"
என்று குறுந்தொகையிலும்
""தைஇத் திங்கள் தண்கயம் போல்"
என்று புறநானூற்றிலும்
"தைஇத் திங்கள் தண்கயம் போல"
என்று ஐங்குறுநூற்றிலும்
"தையில் நீராடி தவம்
தலைப்படுவாயோ" என்று கலித்தொகையிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

இத்தருணத்தில் அனைத்து மக்களும் வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

## உழைப்பால் உயர்வோம் என்ற சிந்தனையில் ஒன்றிணைவோம்!



**சிவ. சந்திரகாந்தன்,
கிராமிய வீதிகள் அபிவிருத்தி
இராஜாங்க அமைச்சர்.**

தமிழர்களின் பண்பாடுகளில் ஒன்றாக விளங்கும் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் அனைவரது வாழ்விலும் அன்பும், அமைதியும், நலமும், வளமும் பெருக வாழ்த்துகின்றேன்.

எமது நாடு தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு மீண்டெழ முயற்சிக்கும் தருணத்தில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளும் ஆங்காங்கே நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. அந்தவகையில் தற்போது ஏற்பட்டுள்ள பருவகால மழைவீழ்ச்சி அதிகரிப்பினால் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்கு எமது மக்களை அதிகம் பாதிக்கிறது துரதிர்ஷ்டமே.

இந்தச் சூழலில் இயற்கை அன்னைக்கும் உலகத்தார் அனைவருக்கும் அச்சாணியாக விளங்கும் உழவர் பெருமக்களுக்கும் அவர்களுக்கு துணைபுரியும் உயிரினங்களுக்கும் நன்றி கூறும் விதமாக கொண்டாடப்படும் இத்தைத்திருநாளில் நாம் அனைவரும் புதியதோர் நம்பிக்கையோடு பயணிக்க இந்நாளை துணை கொண்டு செயற்பட நாம் திடசங்கர்ப்பம் பூணவேண்டும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' வழி பிறந்தால் எம் மக்கள் வாழ்வு சிறக்கும், எமக்கான அரசியல் தீர்வு கிடைக்கும், என்று எம் மக்களை காலங்காலமாக ஏமாற்றி வரும் தமிழ் அரசியல் தலைமைகள் தற்போது தங்களது தலைமைத்துவப் போட்டியிலே தீர்வின்றி தவிர்ப்பது வேதனையளிக்கிறது. இவ்வாறானவர்களா? எமது மக்கள் பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்குபவர்கள். அது இனி ஒரு போதும் நிகழவே நிகழாது.

இப்படியான தலைவர்களை மக்கள் இன்னும் இன்னும் நம்பி ஏமாறாமல், 'உழைப்பால் உயர்வோம்' என்ற சிந்தனையடிப்படையில் செயல்பட்டு எமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு, எதிர்கால எமது சந்ததியினரின் எதிர்காலத்தினையாவது பயனுள்ளதாகமாற்ற எல்லாம்வல்ல இறைஆசியோடு இந்நன்னாளிலே நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணித்து புதியதோர் திருப்பத்தை நோக்கி நகர்வோம் என உங்கள் அனைவரையும் அழைப்பதோடு, அனைவருக்கும் இத்தைத்திருநாளில் சகலவிதமான ஐஸ்வரியங்களும் கிடைக்க வேண்டும் என மீண்டுமொரு வாழ்த்துகின்றேன்.

# நுளம்பு பெருகும் சூழலை வைத்திருந்தால் பாரபட்சமின்றி கடும் சட்ட நடவடிக்கை!

## வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 15

**நுளம்புக் குடும்பிகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.**

மாகாண டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வு கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற போதே இந்த உத்தரவை அவர் விடுத்தார்.

இதில், டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த யாழ். மாநகர சபை உள்ளிட்ட ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்கள் தங்களால் இயன்ற அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன என்று அவற்றுக்குப் பொறுப்பான அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், பொதுமக்கள் தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவதில்லை எனவும் அதிகாரிகள் கூறினார். இந்நிலையில், சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காத 1,542 இடங்கள் கடந்த 12 ஆம் திகதி வரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 147 இடங்கள் தொடர்பில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களை விட படித்த சமூகம் அதிகமாக வசிக்கும் இடங்களிலே சூழல் பாதுகாப்பு மிக மோசமாக காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கமைய, சூழலை சுத்தமாக பேணாது நுளம்பு பரவும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ், அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்த செயல்பாடுகளுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளுமாறும் ஒவ்வொரு தெருவிலும் பொதுவான இடங்களில் குப்பை தொட்டிகளை வைத்து, அதனை உரியவாறு பராமரிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

இவ்வாறான செயல்பாடுகளில் பொதுமக்களை உள்வாங்கி உள்ளூராட்சி நிறுவனங்கள் செயல்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார். இதேவேளை பொதுமக்களும் சமூக பொறுப்புகளை உணர்ந்து செயல்படுவது இன்றியமையாதது என்று வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் - என்றார்.

(ஐ)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி மோசடி செய்தவர் வடமராட்சியில் கைது!

வடமராட்சி, ஜன. 15

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

வடமராட்சி - அல்வாயை சேர்ந்த 41 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவை சேர்ந்த நபரை இத்தாலி நாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக்கூறி 23 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்று மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில், சந்தேகநபர் நெல்லியடி பொலிஸ் பிரிவினுள் பதுங்கி இருக்கிறார் என்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் அங்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் சுமார் 10 நபர்களிடம் வெளிநாடு அனுப்பி வைப்பதாக கூறி சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார் என தெரியவந்துள்ளது. தொடர்ந்தும் சந்தேகநபரை பொலிஸ் காவலில் வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-02)

# பாடசாலையை உடைத்து பொருட்கள் திருட்டு!

வவுனியா, ஜன. 15

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிரமண்டு வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை உடைத்து திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்தப் பாடசாலையில் திறன் வகுப்பறையின் பூட்டு உடைக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான தொலைக்காட்சி திருடப்பட்டமை தொடர்பில் நேற்று சனிக்கிழமை பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாடசாலைக்கு வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் பாடசாலைக்கு அருகேயுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி. சி. ரி. வி. பதிவையும் பரிசோதித்தனர்.

இதன்போதே, கடந்த வெள்ளிக்கிழமை (123) 15 வயதுடைய சிறுவன் ஒருவன் தொலைக்காட்சியை தூக்கி செல்வது சி. சி. ரி. வியில் பதிவாகியுள்ளது. இந்தக் காட்சிகளின் அடிப்படையில் சந்தேக நபரான சிறுவனை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பொங்கல் பொதிகள் வழங்கல்!



யாழ்ப்பாணம், ஜன. 15

இருபாலைதெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில், இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க ஒழுங்கமைப்பில் யாழ். லயன்ஸ் கழகத்தினரால் தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினரால் மாவட்ட ரீதியில் தைப்பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தவகையில் இருபாலை தெற்கு பிரதேச மக்களுக்கான பொதிகள் வழங்கும் வைபவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொதுநோக்குமண்டபத்தில் லயன்ஸ் கழகத்தலைவர் அலெக்ஸ்சாண்டர் நிக்ஸன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச பொதுமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)



# மேல்மருவத்தூர் சக்தி பீடத்தால் பொங்கல் பொதிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு மேல்மருவத்தூர் சக்தி பீடத்தால் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில் , இலங்கை மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி, சமூகநலம், பண்பாடு அறப்பணி மையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய அறங்காவல் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் சோ.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலய அறங்காவற்குழு தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத்தலைவருமான சீ. வி. கே. சிவஞானம், லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய இணைஸ்தாபகர் கலாநிதி அப்பையா தேவசகாயம், சக்தி பீடம் சக்தி வல்லிபுரம் ரவி, யாழ் லயன்ஸ்கழக முன்னாள் தலைவர் லயன் குமாரசாமி ஜெயந்தன், நல்லூர் வடக்கு சனசமூகநிலைய தலைவர் பூ.லிங்கநாதன், விநாயகர் விளையாட்டுக்கழக தலைவர் த.பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டு பொதிகளை வழங்கினர்.

(ஐ)

# 21 கிலோ கஞ்சாவுடன் நயினாதீவில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 15

நயினாதீவில் 21 கிலோ கஞ்சா நேற்றுமுன்தினம் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் அந்த இடத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சாவுடன் சந்தேகநபர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ‘நஞ்சாகும் நிலம்’ நூல் வெளியீடு நடைபெற்றது



கிளிநொச்சி, ஜன. 15

ஊடகவியலாளர் மு. தமிழ்ச்செல்வனின் நஞ்சாகும் நிலம் சூழலியல் கட்டுரைகளின்

தொகுப்பு நூல் வெளியீடு கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் 3 மணிக்கு காவேரி கலா மன்றத்தின் இயக்குநர் அருட்தந்தை ரி.எஸ்.யோசுவா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நூலை நூலாசிரியரின் பெற்றோர்கள் வெளியிட்டு வைக்க சமூக சேவையாளரும், தொழிலதிபதிருமான ந. சிவகுமார் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இதனை தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. இதனையடுத்து நூல் ஆய்வுரைகள் இடம்பெற்றன. யாழ். பல்கலைகழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், தனியார் கல்வி நிலைய ஆசிரியர் நிலாந்தன், நூல் ஆய்வுரைகளை ஆற்றினர். இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர்.

(ஐ)

# நாட்டில் பொருளாதாரம் மட்டுமல்ல மனித சிந்தனைகளும் சீரழிந்துள்ளன!

## மக்களை சாடுகின்றது ஜே. வி. பி.

கண்டி, ஜன. 15

**பொருளாதாரத்தில் மாத்திரமா சீரழிவு இருக்கிறது? நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன. மனித சிந்தனைகள் சீரழிந்திருக்கின்றன - என்று தெரிவித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினரான அநுரகுமார திஸநாயக்க.**



தேசிய மக்கள் சக்தியின் கண்டி தொகுதி மகாநாடு நேற்று முன்தினம் நடந்தபோதே அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலில் - பொருளாதாரத்தில் மற்றும் மனித வாழ்க்கையில் மாத்திரம் நெருக்கடி இருப்பதில்லை. மக்களின் சிந்தனையிலும் அவ்வாறுதான் இருக்கிறது. நாம் சரியாக அவதானித்தால் கடந்த பாராளுமன்றத்துக்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் யார் என்பது புலப்படும். குருநாகலில் ஜோன்ஸ்டன், கண்டியில் மகிந்தானந்த, இரத்தினபுரியில் சொக்கா மல்லி, களுத்துறையில் ரோஹித அபேகுணவர்த்தன, அதைப் போலவே, கம்பஹாவில் பிரசன்ன ரணதுங்க போன்றோர் தெரிவு செய்யப்பட்டனர். பிரசன்ன ரணதுங்க கப்பம் வாங்கியமைக்காக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டவர்.

மேலும், அநுராதபுரத்தில் எஸ்.எம்.சந்திரசேனவும் தெரிவு செய்யப்பட்டார். இவர்கள் பலவந்தமாக பாராளுமன்றத் திற்குள் நுழைந்தவர்கள் அல்லர். நாட்டு மக்களின் வாக்குகளாலேயே இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். எனவே, பொருளாதாரத்தில் மாத்திரமா சீரழிவு இருக்கிறது? எமது நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன. மனித சிந்தனைகள் சீரழிந்திருக்கின்றன. எனவே, எம் கண்ணெதிரே இருப்பது ஓர் அழிவடைந்த தேசமாகும். நாம் ஒரு தீர்வுகட்டமான திருப்புமுனைக்கு வந்துள்ளோம். இந்த ஆட்சியாளர்களால் இன்று நாட்டில் அரிசி, எரிபொருள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு தோன்றியுள்ளது. கடன் செலுத்தமுடியாத நாடாக மாறியிருக்கிறோம். வாழ முடியாத ஒரு நாடாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது.

சட்டம் அமுலாக்கப்படாத, ஒழுக்கமில்லாத, போதைவஸ்துக்கள் நிரம்பிய மற்றும் குற்றச் செயல்கள் மலிந்த ஒரு நாடே இன்றைய பெறுபேறு இருக்கிறது. இதே பயணப்பாதையில் சென்று நாம் செத்து மடியப் போகிறோமா? இல்லையென்றால் ஒன்றாக எழுச்சிபெற போகின்றோமா? மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

எம்மிடம் சுலபமான வழியும் இருக்கிறது. அதாவது, எவ்வித பிரச்னையும் இன்றி எல்லோரும் இதே அழிவுப் பாதையில் சுடுகாட்டை நோக்கி பயணிக்கவும் முடியும். இல்லையென்றால், நாம் திடசங்கற்பத்துடன், ஒன்றாக எழுச்சி பெற வேண்டும். சுடுகாட்டுக்குச் செல்லும் பாதையை நிராகரித்து நாம் எழுச்சி பெறுவோம் - என்றார். (ஐ)

# பிளாஸ்ரிக் துடைப்பங்களுக்கு தடை விதிக்குமாறு பரிந்துரை!

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

கொழும்பு, ஜன. 15

சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான துறை கண்காணிப்பு குழுவில், சுற்றுச்சூழல் மாசுபாட்டுக்கு பெரும் பங்களிக்கும் பிளாஸ்ரிக் துடைப்பங்கள் மற்றும் விளக்குமாறு இறக்குமதியை தடை செய்ய வேண்டும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படும் என மேற்படி குழுவின் தலைவர், கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.

இதேவேளை, பிளாஸ்ரிக் கழிவுகளை குறைக்கும் வகையில் லஞ்ச்சீற் பாவனையை தடை செய்வது தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் துறைசார் கண்காணிப்புக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை லஞ்ச்சீற்களை பயன்படுத்துவதை தடை செய்யுமாறு மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்துக்கு குழு பரிந்துரைகளை வழங்கியது. அதை கடைபிடிக்க ஆறு மாதங்கள் அவகாசம் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

# சூதாட்ட உரிமம், புதுப்பித்தல் கட்டணங்கள் அதிகரித்தன!

கொழும்பு, ஜன. 15

சூதாட்ட (கசினோ) உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்களை அதிகரிக்கப் படவுள்ளன என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, குறைந்தபட்சம் 25 கோடி அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு கசினோ உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் தலா ஆயிரம் கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் 50 கோடி அமெரிக்க டொலர் முதலீடு செய்பவர்களுக்கு ரூ. 500 கோடி ரூபாய் உரிமக் கட்டணம் மற்றும் ஆயிரம் கோடி ரூபாய் புதுப்பித்தல் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டண உயர்வு 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீதி சோதனை நடவடிக்கை நுவரெலியாவில் தொடரும்!

## பொலிஸார் அறிவிப்பு

நுவரெலியா, ஜன. 15

நுவரெலியா பொலிஸ் எல்லைக்குள் பிரவேசிக்கும் அனைத்து வாகனங்களையும் சோதனை செய்யும் நடவடிக்கைகள் தொடரும் என நுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

விடுமுறை நாட்களில் நுவரெலியாவுக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், போதைப்பொருள் புழக்கத்தை குறைக்கும் வகையிலேயே இது அமைந்துள்ளது. யுக்திய நடவடிக்கைக்கு இணையாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன்படி நுவரெலியா பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நுவரெலியா நகர எல்லைக்குள் பிரவேசிக்கும் அனைத்து வாகனங்களையும் இரவு - பகலாக சோதனையிடுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# கந்தக்காடு புனர்வாழ்வு நிலையம் முகாமைத்துவத்தை மாற்ற முடிவு!

## நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஜன. 15

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் மோதல் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது. அத்துடன், கந்தக்காடு முகாமைத்துவத்தை மாற்றியமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் அண்மையில் மோதல் இடம்பெற்றது. இது தொடர்பில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் தெரிவித்தவை வருமாறு,

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் கைதிகளுக்கு இடையே தொடர்ச்சியாக இடம்பெறும் மோதல் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கைதுகள் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த மோதல்கள் குறித்து விரிவான அறிக்கை கோரப்பட்டுள்ளது.

அத்துடன், கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தின் முகாமைத்துவத்தை மாற்றியமைப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள புனர்வாழ்வு மத்திய நிலையங்களை கண்காணிப்பதற்கு விசேட நடவடிக்கை எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்படும். அத்துடன், கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்துக்கு நேரில் சென்று பார்வையிட தீர்மானித்துள்ளேன் - என்றார். (ஐ)



# இறப்பர் பட்டி சிறுவனுக்கு எமனானது!

கொழும்பு, ஜன. 15

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனின் கழுத்தில் இறப்பர் பட்டி இறுகியதால் அவர் உயிரிழந்தார்.

இரத்தினபுரி - கலவனா பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 9 வயது சிறுவனு உயிரிழந்தார்.

சிறுவன் தனது வீட்டில் இறப்பர் பட்டி ஒன்றை இரும்பு ஒன்றில் கட்டி சுழற்றியதாகவும், பின்னர் அந்த இறப்பர் பட்டி கழுத்தில் இறுகியதாகவும் விசாரணையில் தெரிய வந்ததாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அமைச்சுகளுக்கு புதிய செயலர்கள்!

கொழும்பு, ஜன. 15

கல்வி, நீதித்துறை உள்ளிட்ட 11 அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்களை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

உயர்தரப் பரீட்சையின் -

# விவசாய விஞ்ஞான வினாத்தாள் பெப்ரவரி 01இல் நடத்த தீர்மானம்!

கொழும்பு, ஜன. 15

கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையில் விவசாய விஞ்ஞானப் பிரிவின் இரண்டாம் பகுதிக்கான விசேட பரீட்சையை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி காலை 8.30 மணி முதல் 11.40 மணி வரை நடத்துவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களத்தினால் இரத்து செய்யப்பட்ட விவசாய விஞ்ஞானப் பிரிவின் இரண்டாம் பகுதிக்கு பதிலாக இந்த சிறப்பு பரீட்சை நடைபெறுகிறது.

இதன்படி, இம்மாதம் 31ஆம் திகதி முடிவடையவிருந்த 2023(2024) உயர்தரப் பரீட்சை பெப்ரவரி 01ஆம் திகதி நிறைவடையும் எனவும் அன்றைய தினம் அனைத்துப் பரீட்சை நிலையங்களும் வழமை போன்று நடைபெறும் எனவும் பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

வடிகின்றது பெருவெள்ளம்

# மட்டக்களப்பு மக்கள் பொங்கலுக்கு தயார்!





**மட்டக்களப்பு, ஜன. 15**

**வெள்ள அனர்த்தத்துக்கு மத்தியில் மட்டக்களப்பு மக்கள் பொங்கல் பண்டிகையை கொண்டாடும் விதமாக பெரும் ஆர்வத்துடன் நேற்றைய தினம் பொருட்களை கொள்வனவு செய்து சென்றனர்.**

மட்டக்களப்பில் அண்மை நாட்களாகப் பெய்த தொடர் மழையால் ஏற்பட்ட பெருவெள்ளம் வடிந்து போக்குவரத்து நடைபெறும் நிலையில் அரச மற்றும் தனியார் பஸ்களில் படுவான்கரையிலிருந்து மக்கள் எழுவான் கரைக்கு வந்து பொருட்கொள்வனவில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையிலும் புதிய பானை, புது அகப்பை, கரும்பு, மஞ்சள்,இஞ்சி,பழங்கள் மற்றும் புதிய ஆடைகள் என்பனவற்றை கொள்வனவு செய்து சென்றனர்.

(ஐ)



## அறிவுறுத்தல்களை மதிக்காமல் வெள்ளம் பார்க்கக்கூடும் மக்கள்!

*அக்கரைப்பற்று, ஜன. 15*

அடைமழை காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கின. பல குளங்கள் வான் பாய்கின்றன. இந்த நிலையில், அம்பாறை - காரைதீவு - மாவடிப்பள்ளி வீதி வெள்ளத்தில் மூழ்கி போக்குவரத்து அபாயகரமானதாக மாறியுள்ளது. இந்த பாதைகள் ஊடாக வாகனங்கள் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அரசாங்கமும் அரச திணைக்களங்களும் அறிவித்துள்ள நிலையில் இவற்றை பொருட்படுத்தாது சாய்ந்தமருது, கல்முனை, மாளிகைக்காடு, காரைதீவு, மருதமுனை, நிந்தவூர் பகுதிகளின் மக்கள் வெள்ளம் பார்ப்பதற்காக மாவடிபள்ளியில் தினமும் திரண்டு வருகின்றனர்.

இதனால், கல்முனை- அக்கரைப்பற்று மற்றும் கல்முனை- அம்பாறை வீதிகள் வாகன நெரிசலால் பெரும் சிரமங்கள் உருவாகியுள்ளன.

சிறுவர்கள் வெள்ளம் வடியும் இந்த இடத்தில் சிறுவர்கள் அதில் இழுத்துச் செல்லப்படக்கூடும் இதனால், அங்கு மக்களை வருகை தரவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டபோதும் நூற்றுக்கணக்கில் மக்கள் தினமும் திரள்கின்றனர். (ஐ)

## சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு!



*கிண்ணியா, ஜன. 15*

கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு முஸ்லிம் மகளிர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் திருமதி நசீரா நஜாத் தலைமையின் கீழ் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட சாரணியர் ஆணையாளர் எஸ். சசிகுமார், உதவி ஆணையாளர் வசந்தகுமார், சாரணியர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசூஹர் கான், விசேட விருந்தினராக முன்னாள் அதிபர் நாதிரா ஷஹீட் அமீன் பாரி, சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பிரதிபரும் கல்லூரியின் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது 68 சாரணிய மாணவிகள் சாரணியர் சத்தியப்பிரமானம் செய்து கொண்டனர். (ஐ)

# மட்டு. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு உத்தரவு!

அரசாங்க அதிபர் விடுத்தார்

*மட்டக்களப்பு, ஜன. 15*

நாசிவன்தீவு வீதியை ஊடறுத்துப் பாயும் பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மட்டக்களப்பு அரச அதிபர் திருமதி ஜே. முரளிதரன் உத்தரவிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த அடைமழை காரணமாக பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், சித்தாண்டி, கிரான், வாகரை மற்றும் வாழைச்சேனை உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் பல இடங்களில் பிரதான வீதியை குறுக்கறுத்து வெள்ள நீர் செல்வதால் அப்பகுதிகளின் ஊடாக போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து மாவட்ட அரசாங்க அதிபரினால் பொது



மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு நாசிவன் தீவு பகுதியிலும் பிரதான வீதியை ஊடறுத்து இரண்டு அடிக்கு மேலாக வெள்ள நீர் வேகமாக கடந்து செல்வதால் பொதுமக்கள் அப்பகுதியில் வேடிக்கை பார்க்க செல்வதும் ஆபத்தான முறையில் அதனை கடந்து செல்வதையும் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலையில், இந்த இடத்தை அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் அப்பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

# 920 வர்த்தக நிலையங்கள் மீது கடந்த ஆண்டு சட்ட நடவடிக்கை!

*மட்டக்களப்பு, ஜன. 15*

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2023 ஜனவரி மாதத்திலிருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 1200 இற்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி என். முஹம்மத் சப்றாஸ் தெரிவித்தார்.

இவற்றில் 920 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் மட்டக்களப்பு, ஏறாவூர், களுவாஞ்சிகுடி, வாழைச்சேனை, வாகரை ஆகிய நீதிவான் நீதிமன்றங்களில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த சுற்றி வளைப்புகளின் மூலம் ஒரு கோடியே 24 இலட்சத்து 54 ஆயிரத்து 50 ரூபாய் அபராதம் அறவிறப்பட்டுள்ளதாக மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலை நிர்ணயம், விலையை காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை - காட்சிப் படுத்தியமை, அத்தியவசியப் பொருட்களை விற்பனை செய்யாது மறுத்தமை மற்றும் பதுக்கியமை, மின் மற்றும் இலத்திரனியல் சாதனப் பொருட்களுக்கு கட்டுறுத்து காலம் (Warranty) வழங்காமை, பொருட்களை விற்பனை செய்யும் போது முறையான பற்றுச்சீட்டு விநியோகிக்காமை, பொருட்களின் முறையான விபரணமின்றி (Label ) விற்பனை செய் தமை போன்ற காரணங்கள் இச்சுற்றி வளைப்புககளின் போது அதிகாரசபையினால் கண்டறியப்பட்டன - என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் நிலைமையை நேரில் பார்த்த எம். பி.!

அம்பாறையில் பெய்த கடும் மழையால் பெருவெள்ளம் ஏற்பட்டது. தற்போது, அங்கு வெள்ளம் வடிந்து வருகின்றது. இந்த நிலையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட - இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை தொடர்பில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் நேரில் பார்த்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

அதன் தொடர்ச்சியாக அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் வெள்ள நிலைமைகளை கண்டறிந்த அவர் அட்டாளைச்சேனை பிரதேச மக்களுக்கான நிவாரண தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பிலும் இடம்பெயர்ந்த மற்றும் வெள்ளத்தில்



மூழ்கியுள்ள மக்களுக்கான உணவுத் தேவைகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பிலும் அட்டாளைச்சேனை சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவை குழு தலைவர் அப்துல் ஹலீம் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடி தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பிரதேச செயலாளரையும் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார். (ஐ)

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் 100 நாட்களை எட்டியது!

காஸா, ஜன. 15

**இஸ்ரேல் - ஹமாஸ் போர் 100ஆவது நாளை நேற்று எட்டியது. போர் விரிவடைந்து வரும் நிலையில், போரில் பலியானவர்களின் எண்ணிக்கை உள்பட அதிர்ச்சியளிக்கும் எண்களை வெளியிட்டுள்ளது அசோசியேட்ட் பிரஸ்.**

**பலஸ்தீன சுகாதார அமைச்சகம் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தகவலின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட விபரங்கள் இவை.**



**இறப்புகள்**

காஸாவில் பலஸ்தீனர்கள் பலி எண்ணிக்கை 23 ஆயிரத்து 843ஆக உள்ளது. இதேநேரம், ஒக்ரோபர் 7 ஆம் திகதி நடந்த தாக்குதலில் ஆயிரத்து 139 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

மேற்கு கரையில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 347, காஸாவில் பலியான பத்திரிகையாளர்கள் 82, பலியான ஐ.நா உறுப்பினர்களின் எண்ணிக்கை 148, சுகாதார பணியாளர்கள் 337 ஆக உள்ளது.

இதேபோன்று, ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் 314 இஸ்ரேல் படையினர் உயிரிழந்தனர். காஸாவில் நடக்கும் போரில் 187 இஸ்ரேல் படைகள் உயிரிழந்ன. இதேநேரம், இஸ்ரேல் நடத்தும் போரில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹமாஸ் போராளிகள் உயிரிழந்தனர்.

**கற்றல் பாதிப்பு**

இதேநேரம், காஸாவில் 45 - 56 வீதமான கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதில், 69 வீதத்துக்கு மேற்பட்ட கட்டடங்கள் பாடசாலைகளாகும்.

காஸாவின் மொத்த சனத்தொகையில் 26 வீதத்தினர் - 5 இலட்சத்து 76 ஆயிரத்து 600 பலஸ்தீனர்கள் பட்டினியால் வாடுகின்றனர். 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறார்கள் - 100 வீதத்தினரும் பாடசாலைக்கு செல்லவில்லை.

காஸாவில் இருந்து 85 வீதமான பலஸ்தீனர்கள் - 18 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இஸ்ரேலில் 2.6 வீதத்தினர் - 2 இலட்சத்து 49 ஆயிரத்து 263 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

**பணயக்கைதிகள்**

ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் என 250இற்கும் மேற்பட்டவர்கள் பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர். இதில், 121 பேர் விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் 33 பேர் உயிரிழந்தனர்.

இதேநேரம், இஸ்ரேலி 240 பலஸ்தீனர்களை விடுதலை செய்துள்ளது. எனினும், இஸ்ரேலின் சிறைகளில் உள்ள பலஸ்தீனர்கள் விபரம் தெரியவில்லை. தவிர, இஸ்ரேல் மீது இதுவரை 14 ஆயிரம் ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இஸ்ரேல் அரசுக்கு எதிராக 24 மணிநேர மக்கள் பேரணி!

டெல் அவிவ், ஜன. 15

இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி நேற்றுடன் 100 நாள் நிறைவடைந்தது. இதனையொட்டி 24 மணி நேர பேரணி இஸ்ரேலின் டெல் அவிவிவல் ஆரம்பமானது.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் ஆயிரத்து 139 பேரை கொன்றனர். 240 பேரை பணயக் கைதிகளை பிடித்தது. இதில் விடுதலை செய்யப்பட்டவர்கள் பலியானவர்கள் போக இன்னும் 139 பேர் ஹமாஸின் பிடியில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதனிடையே, ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் போர் நடத்தி வருகிறது. இதில், 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச சமூகம் எதிர்ப்பை தெரிவித்து வருகிறது.

இதேநேரம், இஸ்ரேல் மக்களும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்திவருகின்றனர்.

இந்நிலையில், நேற்று 24 மணி நேர பேரணியை மக்கள் தொடங்கியுள்ளனர். கடந்த ஒக்ரோபர் 7இல் ஹமாஸ் அமைப்பு தாக்குதல் நடத்திய நேரமான காலை 6.29 மணியளவில் பேரணி தொடங்கப்பட்டுள்ளது.

இவர்கள் பணயக் கைதிகளை மீட்கும் அரசின் நடவடிக்கையில் அதிருப்தி தெரிவித்ததுடன், இஸ்ரேல் அரசாங்கம், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக குரல் எழுப்பிவருகின்றனர். (ஐ)

## அடுத்த 8 வருடங்களில் செவ்வாயில் விண்கலத்தை தரையிறக்குவோம்!

### எலான் மஸ்க் அறிவிப்பு

நியூயோர்க், ஜன. 15

அடுத்த 8 ஆண்டுகளுக்குள் செவ்வாய் கிரகத்தில் ஸ்டார்ஷிப் விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கும் - என்று எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க்கின் ‘ஸ்பேஸ் எக்ஸ்’ நிறுவனம் பல்வேறு விண்வெளி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் நிலவுக்கும், செவ்வாய் கிரகத்துக்கும் மனிதர்களை அனுப்பும் வகையில், உலகின் மிகப்பெரிய ஏவூர்தியைதயாரித்துள்ளது. 33 எந்திரங்கள் பொருத்தப்பட்ட இந்த ஏவூர்திக்கு ‘ஸ்டார்ஷிப்’ என்று பெயரிடப்பட்டுள்ளது.



இருப்பினும் இந்த ஏவூர்தி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதற்கட்ட சோதனையின் போது தொழில்நுட்ப கோளாறு காரணமாக வெடித்து சிதறியது. பின்னர் தவறுகள் சரிசெய்யப்பட்டு நவம்பரில்மீண்டும் சோதனை செய்யப்பட்ட போது விண்கலம் தனியாக பிரிந்தபிறகு, பூஸ்டர் வெடித்து சிதறியது. இதையடுத்து தவறுகள் சரி செய்யப்பட்டு, மூன்றாவது சோதனையை அடுத்த மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து பேசிய எலான் மஸ்க், மூன்றாவது ஸ்டார்ஷிப் சோதனை வெற்றிகரமாக அமையும் - என்றார். மேலும், தனது நிறுவனம் அடுத்த 8 ஆண்டுகளுக்குள் செவ்வாய் கிரகத்தில் ஸ்டார்ஷிப் விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கும். மனிதர்களை நிலவுக்கு அனுப்பும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ)

## தாய்வான் ஜனாதிபதித் தேர்தல்; அமெரிக்க ஆதரவாளர் வெற்றி!

### சீனா மிரட்டல்

தைபே, ஜன. 15

தாய்வானில் நேற்றுமுன்தினம் நடந்த ஜனாதிபதி தேர்தலி அமெரிக்க ஆதரவு கட்சியான ஜனநாயக முன்னேற்ற கட்சியின் லாய் சிங் டி வெற்றி பெற்றுள்ளார்.

இந்தத் தேர்தலில், ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சி சார்பில் தற்போதைய உபஜனாதிபதிலாய் சிங் டி, பிரதான எதிர்க்கட்சியான குவோமின்டாங் சார்பில் ஹவ் யூ, தாய்வான் மக்கள் கட்சி சார்பில் கோ வென் ஜி ஆகியோர் போட்டியிட்டனர்.

2.5 கோடி மக்கள் தொகையில் 1.9 கோடி பேர் வாக்குரிமை பெற்றிருந்தனர். வாக்குப்பதிவில் 70சதவீதத்தினர் வாக்களித்தனர்.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதல் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சியின் வேட்பாளர் லாய் சிங் டி முன்னிலையில்



இருந்தார். இறுதி சுற்று வாக்கு எண்ணிக்கையில் அவர் 53.74 இலட்சத்துக்கும் அதிகமாக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். குவோமின்டாங் கட்சி வேட்பாளர் ஹவ் யூ-க்கு 44.59 இலட்சம் வாக்குகள் கிடைத்தன.

ஜனாதிபதி தேர்தலில் லாய் சிங் டி வெற்றிபெற்றதும் சீன பாதுகாப்புத் துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், “தாய்வான் விவகாரத்தில் சீன மக்கள் விடுதலை படை எதற்கும் தயார் நிலையில் இருக்கிறது. தாய்வானை சுதந்திர நாடாக அறிவிக்க முயன்றால், அந்த முயற்சியை நசுக்குவோம்” என்று எச்சரித்துள்ளது.

இதேவேளை, சீனாவில் கடந்த 1911ஆம் ஆண்டில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, சீன தேசிய கட்சி ஆட்சியை கைப்பற்றியது. கடந்த 1927ஆம் ஆண்டில் சீன தேசிய கட்சிக்கு எதிராக, சீன கம்யூனிஸ்ட் கட்சி போர்க் கொடி உயர்த்தியது. இதன் காரணமாக 1949ஆம் ஆண்டு வரை சீனாவில் உள்நாட்டுப் போர் நீடித்தது. இந்தப் போரில் தோல்வியை தழுவிய சீன தேசிய கட்சியினர், தென் சீன கடலில் 168 தீவுகள் அடங்கிய தாய்வானில் குடியேறி ஆட்சி நடத்தினர். அந்தப் பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

சர்வதேச அரங்கில் தற்போது 14 நாடுகள் மட்டுமே தாய்வானை தனி நாடாக அங்கீகரித்துள்ளன. தாய்வானுக்கு அமெரிக்கா பெருமளவு ஆயுத உதவிகளை வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மண்சரிவில் 18 பேர் பலி!

போகோட்ட, ஜன. 15

தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் ஏற்பட்ட மண்சரிவில் 18 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து அந்நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தவை வருமாறு, குயிபோ, மெடெலின் நகரங்களுக்கு இடையிலான மலைப் பகுதியில் வெள்ளியன்று நிலச்சரிவு ஏற்பட்டது.

இதில் புதையுண்டு 18 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தில் மேலும் சிலர் காணாமல் போயுள்ளனர். அவர்களை மீட்கும் பணி நடக்கிறது - என்றனர். (ஐ)

# பொது வேட்பாளராகவே ரணில் களமிறங்குவார்!

## சஜித்தும் ஆதரிக்கலாம் என்கிறார் ரவி!

கொழும்பு, ஜன. 15

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளராகவே களமிறங்கவுள்ளார் என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க, சஜித் பிரேமதாஸவும் அவருக்கு ஆதரவளிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.**

ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலானது, அரசியலமைப்பின் பிரகாரம் நடைபெறவுள்ளது. அதில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை. அதனடிப்படையில் ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னதாக தேர்தல் நடத்தப்படலாம். அவ்வாறு தேர்தல் நடத்தப்படுகின்றபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகள் சார்பற்ற பொதுவேட்பாளராகவே களமிறங்கவுள்ளார்.

குறிப்பாக, நாட்டைப் பொருளாதார ரீதியாக மீட்டெடுக்கும் தேசிய வேலைத்திட்டத்தினை முன்னெடுக்க வல்லவரான அவருடைய அர்ப்பணிப்பையும், சேவையையும் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசியல் கட்சிகள் அவருக்கு பகிரங்கமான ஆதரவை வெளியிட வேண்டும் என்று கோருகின்றோம்.

விசேடமாக சஜித் பிரேமதாஸ கூட கட்சிசார்பற்ற ஜனாதிபதி வேட்பாளர் என்ற அடிப்படையில் அவரை ஆதரிப்பதற்கு எவ்விதமான தடைகளையும் நாம் ஏற்படுத்தப்போவதில்லை. தற்போதைய சூழலில் நாட்டின் வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டினை விரைந்து பொருளாதார முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும் ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உட்பட பல தரப்பினரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாடு மீண்டெழுந்து வருவதனை பாராட்டியுள்ளனர். ஆகவே அவருடைய அர்ப்பணிப்பான அரசியல் சேவை தொடர்வதன் ஊடாகவே நாட்டை மீண்டும் நிலைக்கு கொண்டு வரமுடியும் - என்றார்.

# வாகன இறக்குமதி தொடர்பில் புதிய வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜன. 15

வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் புதிய வர்த்தமானியை வெளியிட்டுள்ளது. இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு தேவைப்படும் அத்தியாவசியமான சில வாகனங்களை இறக்குமதி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்படி, கல்வி அமைச்சுக்கு இரண்டு பஸ்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. சுகாதார அமைச்சுக்காக 21 டபிள் கெப் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும்.

நடமாடும் மகப்பேறு சிகிச்சை நிலையங்களுக்கு பயன்படுத்தப்படும் 3 வாகனங்களும், தொழில் அமைச்சுக்கு ஒரு வாகனமும் கொண்டுவரப்படவுள்ளன.



விமானத்திலிருந்து பயணிகள் இறங்குவதற்கு தேவையான 3 வாகனங்களை சிறீ லங்கன் எயார்லைன்ஸ் இறக்குமதி செய்யும்.

வெளிநாட்டு உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு மாத்திரமே வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

சிறீ லங்கன் எயார்லைன்ஸ் மாத்திரமே அது தொடர்பான இறக்குமதி நடவடிக்கைகளை தனது சொந்தப் பணத்தில் மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# 'யுக்திய' நடவடிக்கை 771 பேர் கைதாகினர்!

கொழும்பு, ஜன. 15

'யுக்திய' நடவடிக்கையில் நேற்று நள்ளிரவு 12 மணி வரை முடிவடைந்த 24 மணி நேரத்தில் சுற்றிவளைப்புகளில் 771 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 23 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவருக்கு எதிராக சட்ட விரோத சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்ட 7 பேர் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்ட நிலையில் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 192 கிராம் ஹெரோயின், 101 கிராம் ஐஸ் மற்றும் 10,611 மாத்திரைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

(ஐ)

# போதைப்பொருளுடன் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, ஜன. 15

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் விசேட அதிரடிப்படை கான்ஸ்டபிள் ஒருவர் மாத்தறை பொல்ஹேனவில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பசறை முகாமில் கடமையாற்றியவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விடுமுறையிலிருந்த இந்த கான்ஸ்டபிள், ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்தபோது கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

(ஐ)

# ஜப்பானின் இலகு ரயில் திட்டம் எமது ஆட்சியில் நிறைவுறும்!

## அந்த நாட்டு அமைச்சருக்கு சஜித் உறுதி

கொழும்பு, ஜன. 15

"ராஜபக்ஷ அரசாங்கத்தில் எவ்வித அடிப்படை காரணங்களும் இன்றி இடைநிறுத்தப்பட்ட இலகு ரயில் திட்டத்தை எமது ஆட்சியில் மீண்டும் ஆரம்பிக்கப்படும்", என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஜப்பான் நிதி அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

உத்தியோகபூர்வ பயணமாக நாட்டுக்கு வருகை தந்த ஜப்பானிய நிதியமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் இடையேயான சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஜப்பான் தனது பொருளாதாரத்தின் விரைவான தொழில்மயமாக்கல் மூலம் அதன் ஏற்றுமதித் துறையை எவ்வாறு மேம்படுத்த முடிந்தது என்பது உட்பட இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய காலப்பகுதியில் ஜப்பானின் புனரமைப்பு அனுபவத்திலிருந்து இலங்கை பாடங்களைக் கற்றுக்கொள்வதன் முக்கியம் பற்றியும் சஜித் இதன்போது குறிப்பிட்டார்.



இலகு ரயில் திட்டத்தை திடீரென இரத்துச் செய்வதற்கு முன்னைய ராஜபக்ஷ அரசாங்கம் எடுத்த தொலைநோக்குப் பார்வையற்ற தீர்மானம். எமது கட்சியின் கீழ் அமைக்கப்படும் அரசாங்கத்தில் இத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் இதன்போது அவர் உறுதியளித்தார்.

(ஐ)

# வன்புணர்வுக்கு முயன்றவரை கத்தியால் குத்தி கொன்ற பெண்!

கொழும்பு, ஜன. 15

வீட்டுக்குள் நுழைந்து பெண் ஒருவரை வன்புணர்வு செய்ய முயன்றவரை அந்தப் பெண் கத்தியால் தாக்கியதில், சந்தேகநபர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மாத்தறை - தங்காலை - மொரகெட்டியார பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பெண்ணின் கணவர் வீட்டில் இல்லாத நிலையில் பெண் தனித்திருந்துள்ளார். அந்தச் சமயம் சந்தேகநபர் பெண்ணிடம் தண்ணீர் தருமாறு கேட்டுள்ளார். அந்தப் பெண் தண்ணீரை எடுப்பதற்கு சமையலறைக்கு சென்றபோது, பின்தொடர்ந்த நபர் அவரை வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளார்.

அவரிடம் இருந்து தப்பிக்க சமையலறையில் கத்தியால் அவரை தாக்கியுள்ளார் பெண். இதில், சந்தேகநபர் அங்கேயே விழுந்து மரணமானார்.

தங்காலை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அத்துடன், அந்தப் பெண் பொலிஸ் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# தாயுடன் தகாத தொடர்பில் இருந்தவர் மகள்களை துஷ்பிரயோகம் செய்தார்!

கொழும்பு, ஜன. 15

களுத்துறையில் தாயுடன் தகாத தொடர்பை பேணிய நபர், சிறுமிகளான பெண்ணின் இரு மகள்ளையும் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் 9 மற்றும் 13 வயது சிறுமிகளே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட சிறுமிகளின் தந்தை 4 வருடங்களுக்கு முன்னர் மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டு பிரிந்து சென்றுள்ளார். இந்த நிலையில், சிறுமிகளின் தாய் வேறொரு நபருடன் தொடர்பை பேணி வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட சிறுமிகள் சுகயீனம் காரணமாக களுத்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதன்போதே, அவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தெரிய வந்தது.

தாயுடன் தொடர்பை பேணிய நபரே இரு சிறுமிகளையும் அவர்களின் வீட்டில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். மருத்துவமனை நிர்வாகம் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் 44 வயதான சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

ஈழநாடு



## யாழ்...

இந்தப் பொங்கல் விழா தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க பணிமனையின் இணைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில் நடை பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இளைஞர்கள்...

மீட்கப்பட்ட சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## மின்சார...

இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய உத்தேச மின்கட்டண திருத்தத்தின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

மின்சார சபை இந்த ஆண்டு 2 ஆயிரத்து 300 கோடி ரூபாயை இலாபமாக எதிர்பார்க்கிறது. இதனால், 3.34 வீத கட்டணக் குறைப்பை முன்மொழிந்துள்ளது. இந்த மின்கட்டண குறைப்பு எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது வீடுகளுக்கான மின்சார கட்டண நிர்ணயம் 0 - 30 அலகுகளுக்கு 12 ரூபாயாக உள்ளது. உத்தேச திருத்தத்தின்படி இது 11 ரூபாயாக அமையும். இதற்கான நிலையான கட்டணம் 185 ரூபாயில் இருந்து 165 ரூபாயாகக் குறைக்கப்படும்.

31 - 60 அலகுகளுக்கான கட்டணம் 30 ரூபாயாக உள்ளது. உத்தேச திருத்தத்தின்படி இது 27 ரூபாய் 50 சதமாக அமையும். நிலையான கட்டணம் 360 ரூபாயில் இருந்து 330 ரூபாயாகக் குறைக்கப்படும்.

60 - 90 அலகுகளுக்கு 41 ரூபாயாக உள்ளது. உத்தேச திருத்தத்தின்படி இது 39 ரூபாயாக அமையும். நிலையான கட்டணம் 480 ரூபாயிலிருந்து 455 ரூபாயாக நிர்ணயிக்கப்படும்.

90 - 120 அலகுகளுக்கான கட்டணம் 59 ரூபாயிலிருந்து 56 ரூபாயாகவும் நிலையான கட்டணம் ஆயிரத்து 180 ரூபாயிலிருந்து ஆயிரத்து 120 ரூபாயவும் குறைவடையும்.

121 - 180 அலகுகளுக்கான கட்டணம் 59 ரூபாயிலிருந்து 57 ரூபாயாகவும் குறைவடையும். இதற்கான நிலையான கட்டணம் ஆயிரத்து 770 ரூபாயிலிருந்து ஆயிரத்து 700 ரூபாயாகக் குறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று, கைத்தொழில் பிரிவின் கீழ் மாதாந்தம் 300 அலகுகளுக்கு குறைவான மின்சார பாவனைக்கான தற்போதைய கட்டணமான 20 ரூபாயை 19.25 ரூபாயாக 75 சதத்தால் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நிலையான கட்டணத்தை 15 ரூபாயால் 340 ரூபாயில் இருந்து 325 ரூபாயாக குறைக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் பிரிவின் கீழ் மாதாந்தம் 300 அலகுககளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்துவதற்கான தற்போதைய கட்டணமான 28 ரூபாவை 26.75 ரூபாயாக 1.25 ரூபாயால் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நிலையான கட்டணத்தை 50 ரூபாயால் 1,120 ரூபாயிலிருந்து 1,070 ரூபாயாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல்களுக்கான கீழ் மாதாந்தம் 300 அலகுகளுக்கும் குறைவான மின்சார பாவனைக்கான தற்போதைய கட்டணமான 20 ரூபாயை 19.25 ரூபாவாக 75 சதத்தால் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய நிலையான கட்டணத்தை 15 ரூபாயால் 340 ரூபாயிலிருந்து 325 ரூபாயாகக் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. (ஐ)

## எமது...

வளமான அறுவடையையும், புதிய ஆரம்பத்துக்கான நம்பிக்கையையும் தைப் பொங்கல் திருநாள் குறிக்கிறது. தமிழ் நாட்காட்டியின்படி தை மாதத்தில் சூரியன் வடக்குக்கு நகரும்போது, நிகழும் மங்களகரமான அறுவடைக் காலத்தின் ஆரம்பமாக தைத்திருநாள் அமைந்துள்ளது.

இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக சோழர்களின் ஆட்சிக் காலத்தில் வருடத்தின் முதலாவது அறுவடைக்காக தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அறுவடையின் செழு மைக்கு வித்திட்ட இயற்கை, கால்நடைகள் உள்ளிட்ட அனைத்துக்கும் மனதார நன்றி கூறுவதே பண்டிகையின் நோக்கமாகும்.

இரண்டு வருடங்களாக விவசாயிகளின் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில் தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகிறது. வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் விவசாயத்தின் மீது மிகப்பெரும் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயல்படுத்த ஆரம்பித்துள்ளது. அந்த அனைத்து பணிகளும் வெற்றியளிக்க இம்முறை தைப்பொங்கல் தினத்தில் இயற்கையின் ஆசிர்வாதம் கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

இதேபோல் தைப்பொங்கல் நமக்கு சகவாழ்வையும் மதிப்பையும் போதிக்கிறது. அதற்கமைய நாட்டின் எதிர்காலத்துக்கான புதிய எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கு ஒரு தாய் மக்களாக முன்னேற்றம் அடைய வேண்டும் என அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்ளும் அதேநேரம், தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த தைப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

## நாட்டின்...

சுமத்தியுள்ளது.

இந்த சம்பவம் நடைபெற்று இரண்டு ஆண்டுகள் கடந்தமையை முன்னிட்டு அந்த தேவாலயத்தில் பேராயர் தலைமையில் நேற்று விசேட திருப்பலி பூஜை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது போது உரையாற்றிய பேராயர்,

“அதிர்ஷ்டவசமாக அன்று கைக்குண்டு வெடிக்கவில்லை. சி. சி. ரி. வி. கமெரா காட்சிகளை பார்வையிடாமல், தேவாலயத்தின் ஊழியர் உட்பட 4 பேரை கைது செய்தனர். விசாரணை தொடர்பாக பல்வேறு பொய்களை கூறினர். சி. சி. ரி. வி. கமெரா காட்சிகளில் குண்டு வைத்த நபர் தெளிவாகத் தெரிந்தார்.

பொலிஸார் அந்த நபர் பற்றி தேடவில்லை. இரண்டு வருடங்களுக்கு பின்னரும் நாங்கள் நீதியை கேட்கின்றோம். இந்த சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணைகளை நடத்துங்கள். கைக்குண்டை கொண்டு வந்து தேவாலயத்துக்குள் வைத்த நபர் இலங்கையை சேர்ந்த எவரோ ஒருவராக இருக்கலாம். அந்த நபர் இருக்கின்றார். எவ்வித விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

காரணம் அந்த நபர் அவர்களின் ஆதரவாளர். அவர்களே அந்த நபரை அனுப்பினர். முக்கிய நபர்களே கைக் குண்டை தேவாலயத்துக்கு அனுப்பிவைத்தனர்.

பேரணிகளை நடத்த வேண்டாம் என மக்களை அச்சுறுத்தவே குண்டை தேவாலயத்துக்குள் கொண்டு வந்து வைத்தனர். இது தேர்தல் ஆண்டு. தேர்தல் நடத்தப்பட்டால், மோசடி அரசியல்வாதிகளிடம் ஆட்சியை ஒப்படைப்பதா, புதிய ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைப்பதா என்பதை தீர்மானிக்க எமக்கு சந்தர்ப்பம் உள்ளது” - என கூறியுள்ளார். (ஐ)

# ரூ. 12 இலட்சத்துக்குமேல் வருமானம் பெறுவோர் வரி செலுத்தவேண்டும்!

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, ஜன. 15

12 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் நாட்டின் வரிக் கொள்கையை பின்பற்ற வேண்டும். இல்லையெனில், தேவையான தீர்வுகளை நாங்கள் வழங்க முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு நாடாக நாம் மிகவும் கடினமான முடிவுகளை எடுத்துள்ளோம். இன்று நாடு ஒரு குறிப்பிட்ட நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. சந்தர்ப்பவாத, அரசியல் கோணத்தில் இருந்து பார்க்காமல் சரியான கண்ணோட்டத்தில் பார்த்தால் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியும்.

மக்களுக்கு சிரமம் உள்ளது. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் அதை நிராகரிக்கவில்லை. வீழ்ச்சியுற்ற நாட்டை ஒரேயடியாக மீட்க முடியாது. சிரமங்களிலிருந்து விடுபட, முதலில் ஒரு திட்டம் தேவை. வரி செலுத்த வேண்டிய மக்களை வரி செலுத்த ஊக்குவிக்க வேண் டும்.

12 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் நாட்டின் வரிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இல்லையெனில், தேவையான தீர்வுகளை நாங்கள் வழங்கமுடியாது. அவர்கள் கடனைச் செலுத்த வேண்டும். மற்றபடி குறைந்த வரி செலுத்தியோ, வரி கட்டாமல் இருந்தோ வரி அதிகம் என்று கூச்சல் போடுவதில் அர்த்தமில்லை - என்றார். (ஐ)

### உயர்தர பரீட்சை விவசாய பாட

# வினாத்தாள் வெளியான விவகாரத்தில் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 15

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கான விவசாய விஞ்ஞான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னரே வெளியான சம்பவம் தொடர்பில் அம்பாறையைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறையைச் சேர்ந்த ஆண் ஆசிரியர் ஒருவரே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# திருட்டு சந்தேகநபர் கைக்குண்டுடன் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 15

இளவாலையில் கைக்குண்டுடன் திருட்டு சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

இளவாலையில் உள்ள வீடு ஒன்றை உடைத்து திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டுடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் சந்தேகநபரை கைது செய்வதற்காக இளவாலை பொலிஸார் நேற்று அவரது வீட்டுக்கு சென்றனர்.

அப்போது அவரின் வீட்டில் இருந்து கைக்குண்டு மீட்கப்பட்டது. அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 42,248...

ஆயிரத்து 258 சந்தேக நபர்கள் மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் நடந்த குற்றங்களுக்காக தேடப்பட்டு வரும் 2ஆயிரத்து 485 நபர்களும் உள்ளடங்குவர்.

இந்தப் பட்டியலில் உள்ள அனைத்து சந்தேகநபர்களையும் கைது செய்யும் நோக்கில் பொலிஸ் அதிகாரிகளை 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுத்துமாறும் அனைத்து பொறுப்பதிகாரிகளுக்கும் பதில் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டெங்கு...

திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸூம் பங்கேற்றிருந்தார்.

இதனிடையே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு தொற்றுப் பரவுவதற்கு ஏதுவான சூழலைக் கொண்டுள்ள குடியிருப்புக்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் எந்தவித பாரபட்சமும், தயக்கமும் இல்லாமல் வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும் என அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரட்ன அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ஐ)

## சுகாதார...

இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுகின்றது.

துணை மருத்துவ மற்றும் துணை சுகாதார சேவைகள் தொழில்சங்கங்கள் கடந்த வாரம் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தை முன்னெடுத்தன. இதனால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாட்டில்...

அதிகரிப்பாக உள்ளது.

மேலும்,

அண்மைக்காலமாக நாட்டில் பதிவாகும் பல்வேறு பிரசங்கங்களைக் கேட்டு தற்கொலை செய்து கொண்டவர்களும் இவ்வாறான உளவியல் உந்துதலால் பாதிக்கப்பட்ட ஒரு குழுவாகவே அடையாளம் காண முடியும். இத்தகைய குற்றச் செயல்களுக்கு மற்றவர்களை வழிநடத்தும் நபர்கள் பெரும்பாலும் உளவியல் நிலைக்குப் பலியாகின்றனர். இது அறிவாற்றல் முரண்பாடாக அங்கீகரிக்கப்படலாம். அவர்களின் நடத்தை மற்றும் நம்பிக்கைகள் பூர்த்தி செய்யாதவை அல்லது இரண்டு முரண்பட்ட நம்பிக்கைகளைக் கொண்டிருக்கின்றன என்று மருத்துவர் ரூமி ரூபன் கூறியுள்ளார். (ஐ - சி)

ஈழநாடு
Eelanadu

# பட்டிப் பொங்கல் தினமான நாளை நல்லூரில் கவனவீர்ப்பு!

## மயிலத்தமடு கால்நடை கொடுமைகளை கண்டித்து

யாழ்ப்பாணம், ஜன. 15

**பட்டிப்பொங்கல் தினமான - நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு - மயிலத்தமடுவில் பசுக்கள், காளைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து யாழ்ப்பாணத்தில் கவன வீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.**

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில் தென்கயிலை ஆதீன தவத்திரு அகத்தியர் அடிகளார் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மட்டக்களப்பு - மாதவனை - மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர் செய்யவும் முனையும் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் பசுக்களுக்கும் காளைகளுக்கும் சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வருகின்றனர்

வெங்காய வெடி வைத்து அவற்றின் வாயில் கொடும் காயங்களை ஏற்படுத்தி அவை உணவு உண்ணக்கூட முடியாத, வார்த்தையால் வடிக்க முடியாத கொடுமைகளை வாயில்லா ஜீவன்களுக்கு ஏற்படுத்தி வருகின்றனர். அதனை விட சுட்டும் வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் இந்த பசுக்களுக்கும் காளைகளுக்கும் ஏற்படுத்தப்பட்டு வரும் கொடுமைகள் பூரணமாக நிறுத்தப்பட வேண்டும்.

அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், நீதிமன்றத் தீர்ப்புக்களும் முறையாக அமுல் செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட்டு, பட்டி மேய்ச்சல் தரைகளிலிருந்து அனைத்து சட்டவிரோதிகளும் அகற்றப்பட வேண்டும்.

மேய்ச்சல் நிலத்தில் எந்தவொரு பிற நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இவற்றை ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் குரலாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பாக அரச இயந்திரத்துக்கு ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம். சொல்லொணா துயரை சந்தித்துள்ள கிழக்கின் பண்ணையாளர்களையும் பசுக்களையும் பாதுகாக்க அனைவரும் அணி திரள்வோம்.

தமிழர்களின் பசுக்களுக்கும் காளைகளுக்கும் பொங்கலிட்டு நன்றி செலுத்தும் உயரிய நாளில் அனைவரும் எமது உணர்வுகளை வெளிக்காட்ட நல்லை ஆதீன முன்றிலில் பட்டிப் பொங்கலான எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு, ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் கவன வீர்ப்பில் அனைவரையும் பங்கு கொண்டு கிழக்கின் மயிலத்தமடுவில் தொடர்ச்சியாக நடைபெறும் போராட்டங்கள் வெற்றிபெற வலுச்சேர்க்குமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# பதுளையில் மண்சரிவு 64 பேர் இடம்பெயர்வு!

கொழும்பு, ஜன. 15

பதுளை மாவட்டத்தில் நேற்று நடந்த மண்சரிவால் இடம்பெயர்ந்த 64 பேர் வரதொல பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.



பதுளை - பசறை - படல்கும்புர பகுதியில் நேற்று இடம்பெற்ற மண்சரிவால் 3 வீடுகள் முழுமையாக மண்ணுள் புதையுண்டன. 12 குடும்பங்கள் வசிக்கும் தொடர் வீட்டுக்கு குடியிருப்பும் பாதிக்கப்பட்டது.

அத்துடன், 30 ஏக்கர் வயல்நிலமும் கீழிறங்கியது. இந்த மண்சரிவால் 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் வரதொல பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று மொனராகலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# பௌத்த சிந்தாந்தத்துக்கு தீங்கு ஏற்படுத்துவோர் மீது நடவடிக்கை!

## ஜனாதிபதிக்கு மகாநாயக்க தேரர்கள் கடிதம்

கொழும்பு, ஜன. 15

பௌத்த மதம் தொடர்பாக தவறான சித்தாந்தங்களை பரப்பி, பௌத்த தத்துவத்துக்கு தீங்கு விளைவிப்பதாகக் கூறும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கையின் மூன்று பௌத்த பீடங்களின் பிரதான மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பௌத்த மதத்தை அழிக்க முற்படும் இவ்வாறான நபர்களின் செயல்பாடுகளை வெறும் சம்பவங்களாகக் கருத முடியாது என்பது நிரூபணமாகியுள்ளதாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதத்தின் உன்னத சித்தாந்தத்தை சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நிகழ்வுகளை தடுப்பதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை தயார் செய்ய வேண்டிய தருணம் இதுவாகும்.

மேலும், சமூக ஊடகங்களில் இவ்வாறான கருத்துக்களை பரப்பி பௌத்த சமூகத்தை தவறாக வழிநடத்தி சமூக சீர்கேட்டை ஏற்படுத்த முயற்சிக்கும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாக தயாரிக்க வேண்டும் எனவும் மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்படி, இந்த விடயம் தொடர்பில் 'புத்தசாசனத்தின் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கு" உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று ஜனாதிபதியிடம் மகாநாயக்க தேரர்கள் கோரியுள்ளனர். (ஐ)

# இலங்கையை முதல்தர நாடாக மாற்றும் பயணத்தில் இணைவோம்!

## எதிர்க்கட்சித் தலைவரின் பொங்கல் செய்தி

கொழும்பு, ஜன. 15

பல சவால்களுடன் இன்னுமோர் ஆண்டுக்குள் நுழைந்துள்ளோம். இனம், மதம், ஜாதி, குலம் என்ற வேறுபாடின்றி இந்த சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். இதற்கு தேவையான இயற்கையின் ஆசீர்வாதங்களை இந்தத் தைப்பொங்கல் தினத்தில் பெற்று உலகின் முதல்தர நாடாக மாறுவதற்கான புதிய பயணத்திலும் - புதிய மாற்றத்திலும் இணைந்து கொள்ளுமாறு உலகெங்கும் உள்ள இலங்கையர்களை அழைக்கிறேன் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அந்தச் செய்தியில், இலங்கைவாழ் மற்றும் உலகெங்கிலும் உள்ள இந்து மக்கள் இயற்கைக்கு நன்றி செலுத்தும் முகமாக பக்தியுடனும் மரியாதையுடனும் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் தொடர்பில் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மானுட வளர்ச்சியின் தொடக்கத்தில் இருந்து நாம் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கிறோம். உலகுக்கு உயிர் கொடுக்கும் சூரிய பகவானை வழிபடுவது பண்டைய காலத்திலிருந்தே நடந்து வருகிறது. தைப்பொங்கல் பண்டிகை இந்த சூரிய பகவான் மீதுள்ள அபரிமிதமான நம்பிக்கை மற்றும் மரியாதைக்காக நடத்தப்படும் ஒரு சிறப்பு விழாவாக இந்த தைப்பொங்கல் திருவிழாவை சுட்டிக்காட்டலாம். தைப்பொங்கல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பர பிணைப்புக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு சிறந்த நிகழ்வாகும்,

மேலும் இந்து மக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு நல்ல எண்ணங்களை சேர்க்கும் பண்டிகை என்றும் அழைக்கலாம். அறுவடையை சூரிய பகவானுக்கு படைத்து அடுத்து வரும் ஆண்டில் நல்ல அதிர்ஷ்டத்தை கொண்டு வர வேண்டப்படுகின்றது. நம் நாட்டில் உருவாக்கப்பட்ட வங்குரோத்து நிலையால் ஏற்பட்ட சவால்மிக்க ஆண்டின் முடிவில் இன்னும் பல சவால்களுடன் இன்னுமோர் ஆண்டுக்குள் நுழைந்துள்ளோம். இனம், மதம், ஜாதி, குலம் என்ற வேறுபாடின்றி இந்த சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும்.

இதற்கு தேவையான இயற்கையின் ஆசீர்வாதங்களை இந்தத் தைப்பொங்கல் தினத்தில் பெற்று உலகின் முதல்தர நாடாக மாறுவதற்கான புதிய பயணத்திலும் - புதிய மாற்றத்திலும் இணைந்து கொள்ளுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை இத்தருணத்தில் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

# கள்ளு உரிம கட்டணமும் ரூ. 50 இலட்சமாக அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 15

பனை சாராய (கள்ளு) உரிமக் கட்டணம் 50 இலட்சம் ரூபாயாகவும் மது பானங்களுக்கான வருடாந்த மொத்த விற்பனை உரிமக் கட்டணம் 40 இலட்சம் ரூபாயாலும் அதிகரிக்கப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

மதுவரி அனுமதிப்பத்திர கட்டணத் திருத்தம் குறித்து மீள்பரிசீலனை செய்யவுள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய மதுவரி அனுமதிப்பத்திர கட்டணத் திருத்தத்துக்கு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்த நிலையில், ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.



மதுவரி அனுமதிப்பத்திர கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு கடந்த 12 ஆம் திகதி நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்தது.

இதன்படி, பனை சாராய உரிமக் கட்டணம் 50 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மது பானங்களுக்கான வருடாந்த மொத்த விற்பனை உரிமக் கட்டணம் 40 இலட்சம் ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறித்த கட்டணம் முன்னதாக 10 இலட்சம் ரூபாய் மாத்திரம் வசூலிக்கப்பட்டது.

மதுபானங்களை சில்லறை விற்பனை செய்வதற்கான உரிமக் கட்டணத்தையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு ஒரு கோடி 50 இலட்சம் ரூபாயும், நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு ஒரு கோடி 25 இலட்சம் ரூபாயும் ஏனைய பகுதிகளுக்கு ஒரு கோடி ரூபாயும் செலுத்தப்பட வேண்டும்.

இதனிடையே, ஹோட்டல்களுக்கான மதுபான உரிமக் கட்டணமும் திருத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 200 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் கொண்ட ஹோட்டல்களுக்கான உரிமக் கட்டணமாக 10 இலட்சம் ரூபாய் செலுத்தப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாறிவரும் சமூக அடுக்கமைவும் மலையக சமூகமும்: சில குறிப்புகள்!



**கலாநிதி இரா. ரமேஷ்**
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

கடந்த ஆண்டு முழுவதும் 'மலையகம் 200' என்ற தொனிப்பொருளில் பல்வேறு நிகழ்வுகள் பல்வேறு பிரதேசங்களில் (வடக்கு கிழக்கு உட்பட) இடம்பெற்றன. அவை கண்காட்சி, ஊர்வலங்கள், கலை நிகழ்ச்சிகள், ஆய்வு மாநாடுகள், அரசியல் கூட்டங்கள், பாத யாத்திரை, புத்தக வெளியீடு என பல வடிவங்களில் இடம்பெற்றன. சில நிகழ்வுகள் இந்தியாவிலும் இடம்பெற்றன. கடந்த ஆண்டில் மாத்திரம் சுமார் இருபது நூல்கள் பல தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் தமிழில் பத்து நூல்கள் மலையக மக்களின் சமூக, பொருளாதார நிலைமைகளை ஆராய்கின்றன. இதில் இந்தியாவில் வெளியிடப்பட்ட இரண்டு நூல்களும் அடங்கும். ஆங்கிலத்தில் ஒரே ஒரு நூல் மாத்திரமே வெளியிடப்பட்டது. இதற்கப்பால் பத்துக்கு மேற்பட்ட கவிதை, நாவல்கள், சிறுகதைகள் வெளியிடப்பட்டன. மேலும், மலையக ஆளுமைகள் தொடர்பான இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டதுடன், பல சஞ்சிகைகள் மலையகம் 200 என்ற பெயரில் சிறப்பு மலர்களாக வெளியிடப்பட்டன. அவற்றில் கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் தாய் வீடு, தாயகம் மற்றும் ஜீவநதி என்பவற்றினைக் குறிப்பிட முடியும். அத்துடன், கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐந்து ஆய்வறிக்கைகளை (போக்குவரத்து, சுகாதாரம், வீடமைப்பு, வறுமை என்பவை தொடர்பாக) வெளியிட்டுள்ளன. கடந்த ஆண்டில் சில பதிப்பு முயற்சிகளும் இடம்பெற்றன. அந்தவகையில் கலாநிதி பெ. சரவணக்குமார் மற்றும் எம்.எம்.ஜெயசீலன் ஆகியோர் கோ.நடேசையர் மற்றும் மீனாட்சியம்மாள் ஆகியோரின் வெளியீடுகளை பதிப்பித்துள்ளார்கள்.

இவை இச்சமூகத்தில் எழுச்சிபெற்று வரும் வெளியீட்டுக் கலாசாரத்தினையும், அறிவு சார்ந்த தேடலையும் ஆய்வு குறித்த ஆர்வத்தினையும் காட்டுகின்றன. சில நூல்கள் ஆய்வுக்குரிய பண்புகளைக் கொண்டுள்ளன. இன் னும் சில நூல்கள் வெளிவரவிருக்கின்றன. குறிப்பாக கட்டுரையாசிரியர் மற்றும் பேராசிரியர் சந்திரபோஸ் ஆகியோர் 18 ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றினை தொகுத்து வருகின்றார்கள். அது இவ்வருடம் வெளியிடப்படும். மலையகம் 200 நிகழ்வுகளின் வரிசையில் முதல் முதலாக இடம்பெற்றது ஆய்வு முறையியல் தொடர்பான மூன்று நாள் பயிற்சிப்பட்டறையாகும். இது 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7,8 மற்றும் 9ஆம் திகதிகளில் கண்டியில் அமைந்துள்ள மகாவெளி ரீச் ஹோட்டலில் இடம்பெற்றது. இதன் மூலம் மலைய கத்தைச் சேர்ந்த ஆய்வு மற்றும் எழுத்துத்துறையில் ஆர் வம் உள்ள 30 பேர் வெவ்வேறு பின்புலத்தினைக் கொண்ட வளவாளர்களால் பயிற்றப்பட்டார்கள். அதன் வெளியீ டாகவே இத்தொகுப்பு நூல் வெளிவரவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எவ்வாறாயினும், இக்கட்டுரையின் நோக்கம் மலையகம் 200 நிகழ்வுகள் பற்றி பேசுவதல்ல. மாறாக 200 வருட வரலாற்றைக் கொண்ட மலையக சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமூக மாற்றம் என்ன என்பது தொடர்பாக சுருக்கமாக கலந்துரையாடுவதாகும். மலையகம் 200 என்று சொல்வது சரியா என்ற விவாதம் ஒருபுறம் இடம்பெறும் நிலையில் இக்கட்டுரை மலையக சமூகத்தில் எழுச்சிப்பெற்றுள்ள அடுக்கமைவு அல்லது படையாக்கம் (**social stratification**) தொடர்பாக ஆராய்கின்றது. மலையக சமூகத்தின் வளர்ச்சிப்போக்கினை, இயங்குத் தன்மையினை நீண்டகாலமாக அவதானித்த ஒருவன் என்ற வகையில் அது பற்றி சில விடயங்களை பதிவிட முற்படுகின்றேன். ஒரு தொழிலாளர் வர்க்க சமூகத்தில் எழுச்சிப்பெற்றுள்ள வேறுப்பட்ட சமூகப் பிரிவினரையே இங்கு அடையாளப்படுத்த முற்படுகின்றேன். இது முதலாவது முயற்சியல்ல என்பதனையும் பதிவிடுவது பொருத்தமாகும். அந்த வகையில் மலையக சமூகத்தின் அடுக்கமைவு தொடர்பாக இரண்டு வெளிநாட்டு ஆய்வாளர்கள் ஆழமாக ஆய்வுகளை செய்துள்ளார்கள். இதில் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆர்.ஜெயராமன் என்பவரின் சாதிய முறை மற்றும் பொருந்தோட்ட மக்களின் சமூகக் கட்டமைப்பு தொடர்பான ஆய்வும் (1975), நோர்வே நாட்டைச் சேரந்த ஒட்வர் ஒலூப் என்பவரின் கொத்தடிமை (பிணைக்கப்பட்ட) தொழிலாளர்கள் (1994) என்ற ஆய்வும் குறிப்பிடத்தக்கவையாகும். மேலும் பேராசிரியர் சந்திரபோஸ் அவர்கள் மலையகத் தமிழரின் சமூக படையாக்கம் என்ற தலைப்பில் 1996ஆம் ஆண்டு ஆய்வு கட்டுரையொன்றினை எழுதினார். இவை இச்சமூகத்தின் அடுக்கமைவு தொடர்பாக மிகவும் பயனுள்ள தகவல்களை வழங்குகின்றன. ஆயினும், இவை மிக நீண்ட காலத்திற்கு முன்னர் வெளியிடப்பட்டவை. இன்று இச்சமூகத்தில் கணிசமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதற்கு 2003ஆம் ஆண்டு குடியுரிமைப் பிரச்னை முற்றாகத் தீர்க்கப்பட்டமை பெரியளவிலான தாக்கத்தினைச் செழுத்தியுள்ளது போல் தென்படுகின்றது. மேலும், மலையக மக்கள் ஒரு பக்கம் தொழிலாளர் வர்க்க பரம்பரை, இன்னொரு பக்கம் இனத்துவ சிறுபான்மை மக்கள். ஆகவே, இவர்களின் பிரச்சினைகளை வர்க்க ரீதியாகவும் இனத்துவ ரீதியாகவும் அணுகுவது அவசியமாகும்.

மலையக சமூகம் குடியுரிமையினைப் பெற்றுக் கொண்ட பின்னர் ஒரு வகையான மேல் நோக்கிய நகர்வினை படிப்படியாக அடைந்து வருகின்றது. அந்த வகையில் இன்று இச்சமூகத்தில் நாம் பல வகையான பிரிவினரை அல்லது அடுக்கமைவினை அடையாளம் காண முடியும். இந்த வகைப்பாட்டினை வர்க்கம், தொழில், வருமானம், கல்வி, வாழ்விடம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வதே நோக்கமாகும். வேறு வகையில் கூறுவதாயின், இக்கட்டுரை மலையக சமூகத்தினை புதியதொரு அடுக்கமைவுக்கு உட்படுத்த முற்படுகின்றது.

### சமூக அடுக்கமைவு

முதலில் சமூக அடுக்கமைவு என்றால் என்ன என்பது பற்றிய புரிதல் அவசியமாகும். ஒரு சமூகத்தில் வாழும் மக்களை செல்வம், வருமானம், கல்வி, குடும்பப் பின்னணி மற்றும் அதிகாரம் என்ற அடிப்படையில் வகைப்படுத்துவதாகும். சில ஆய்வாளர்கள் இதனை ஒரு சமூகத்தில் நிலவும் வளங்களின் சமமற்ற பங்கீட்டின் அடிப்படையில் அங்கு வாழும் மக்களை வகைப்படுத்துவது என குறிப்பிடுகின்றார்கள். இத்தகைய சமூக அடுக்கமைவு நிலைபெறுவதற்கு சட்டத்தன்மை அவசியமாகும். அந்த சட்டத்தன்மையினை ஏற்படுத்த தொடர்ச்சியான கலந்துரையாடல், விவாதங்கள் மாற்று சிந்தனைகள், பொது உடன்பாடு அல்லது கருத்தொருமைப்பாடு அவசியமாகும். வேறு வகையில் கூறுவதாயின், அச்சமூகத்தினைச் சேர்ந்த மக்கள் இத்தகைய வகைப்பாட்டுடன் உடன்படும் போது அதற்கு சட்டத்தன்மை கிடைக்கின்றது. மனித வரலாறு என்பது வேறுபட்ட அளவிலான சமூக அசமத்துவம், அநீதி மற்றும் வறுமை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள வேறுபட்ட சமூக அடுக்கமைப்புடன் நெருங்கிய தொடர்புபட்டதாகும். சமூக விஞ்ஞானிகள் மத்தியில் சமூக அடுக்கமைவு தொடர்பான வகைப்பாடு குறித்த பொது உடன்பாடு இல்லை என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆயினும், பொதுவில் ஐந்து வகையான அடுக்கமைப்பு பயன்படுத்துவதாக வாதிடுகின்றார்கள். அவை முறையே 1. பழங்கால அல்லது ஆதிகால சமூகம், 2.அடிமை சமூகம், 3. சாதி மைய சமூகம், 4.மானிய முறை மற்றும் 5.வர்க்க முறை சமூகம் ஆகும். அந்த வகையில் மலையக சமூகத்துடன் அடிமை முறை, நிலமானிய முறை, சாதியம் மற்றும் வர்க்க முறைமை என்பன பெரிதும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றன. இவற்றினை இச்சமூகத்தில் எழுச்சிப்பெற்றுள்ள சமூக மாற்றத்தினை விளங்கிக் கொள்வதற்குப் பயன்படுத்தலாம். அறிமுகப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கடந்த கால ஆய்வுகளில் மலையக சமூகத்தின் அடுக்கமைவினை விளங்கிக்கொள்ள சாதி மிக முக்கியமான அளவுகோலாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் இன்று இச்சமூகத்தில் சாதியம் பெரியளவிலான பேசுப்பொருளாக தென்படவில்லை. ஆகவே, இக்கட்டுரையில் வர்க்க முறைமை மற்றும் கல்வி, தொழில் ஆகியன பிரதான அளவுகோளாகப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு இறக்குமதி செய்யப்பட்ட தொழிலாளர் வகுப்பில் இருந்து மேற்கிளம்பியுள்ள பிரிவினர் குறித்தே இங்கு ஆராயப்படுகின்றது.

அட்டவணை – 1 இந்திய வம்சாவழி மலையக தமிழ் மக்கள் (1911 – 2012)

| வருடம் | மக்கள் தொகை | இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் வகிக்கும் % |
|---|---|---|
| 1911 | 531,000 | 12.9 |
| 1921 | 602,000 | 13.4 |
| 1931 | 817,000 | 15.4 |
| 1946 | 780,000 | 11.7 |
| 1953 | 974,000 | 12.0 |
| 1963 | 1,123,000 | 10.6 |
| 1971 | 1,173,000 | 9.3 |
| 1981 | 818,000 | 5.5 |
| 2012 | 839,504 | 4.1 |

சமூக அடுக்கமைவு என்ற எண்ணக்கரு சமூகவியலில் மிக முக்கியமான ஒன்றாகும். இதனை எல்லா சமூகங்களிலும் அடையாளம் காண முடியும். இதற்கு அடிப்படையாக அமைவது சமூக நகர்வாகும். கார்ல் மார்க்ஸ், மெக்ஸ் வெபர் மற்றும் எமில் டேர்க்கைம் இச்சிந்தனை யினை முன்வைத்தவர்களில் முன்னோடிகள் ஆகும். சமூக - பொருளாதார நிலையே சமூக அடுக்கமைவுக்கான பிரதான அளவுகோல் என இவர்கள் வாதிடுகின்றார்கள். ஐரோப்பாவில் தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமூக வகுப்பு என்பது அடுக்கமைவுக்கான பிரதான அளவுகோளாக காணப்படுகின்றது. மாறாக, வட அமெரிக்காவில் சமூக - பொருளாதார அந்தஸ்து பிரதான அளவுகோளாக உள்ளது. அதில் கல்வியும் தொழிலும் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. கல்வி என்பது மேல் நோக்கிய சமூக நகர்வுக்கு வித்திடுவதுடன் மறுபுறமாக சமூக அசமத்துவத்திற்கு வழி செய்கின்றது எனவும் வாதிடப்படுகின்றது. குறிப்பாக தரமான கல்வியினைப் பெற முடியாத பிரிவினரால் சமூக - பொருளாதார தடை களை உடைத்துக் கொண்டு மேல் நோக்கி செல்ல முடியாமையினால் ஏற்படும் அசமத்துவத்தினை இது குறித்து நிற்கின்றது. அதுவே சரியாக மலையக சமூகத்திற்கு நடந்தது. இலவசக் கல்விக்கான வாய்ப்பு உரிமை மறுக்கப் பட்டமையினால் கடந்த எட்டு தசாப்தங்களுக்கு மேலாக மலையக மக்கள் அனுபவிக்கும் அசமத்துவம் மற்றும் பாகுபாடுகள் இதனை மேலும் விளக்குகின்றன. இன்று கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் கூட, அவை தேசிய வளர்ச்சி குறி காட்டிகளுடன் ஒப்பிடும் போது பெரிதாக மகிழ்ச்சிய டைய முடியாது. சமூக நகர்வு என்பது இயல்பான தோற் றம். தனிநபர் ஒவ்வொருவரும் பிரத்தியேகப் பண்புகள், திறமைகள், சமூக வகிபங்கு என்பவற்றினைக் கொண் டுள்ளனர். அவை தனி மனித நகர்வில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்த வகையில் எல்லா சமூகத்திலும் சமூகக் கட்டமைப்பொன்று காணப்படுகின்றது என்பதனை நாம் மனங்கொள்ள வேண்டும்.

### மலையக சமூகத்தில் எழுச்சிப்பெற்றுள்ள சமூக அடுக்கமைவு

இன்று மலையக சமூகத்தில் பல்வேறு வடிவிலான அடுக்கமைவினை அவதானிக்க முடியும். முதலாவதாக தேயிலை மற்றும் இறப்பு தோட்டங்களில் நிரந்தரமாக தொழில் செய்யும் பிரிவினரைக் குறிப்பிட முடியும். இவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக வீழ்ச்சியடைந்து இன்று சுமார் 1,40,000 பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் மாத்திரமே காணப்படுகின்றார்கள். இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

(மறு பக்கம் பார்க்க)

குறிப்பாக கல்வியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தொழில் ரீதியான நகரத்தை நோக்கிய புலம்பெயர்வு, மாற்று வாழ்வாதாரத்துக்கான தேடல், தோட்டத்தொழிலில் வழங்கப்படும் குறைந்த சம்பளம், மரபு ரீதியான தொழில் நடைமுறைகள், அதிகார இடைவெளி, தொழில் கௌரவம் போன்ற பல காரணிகள் இன்றைய இளம் தலைமுறையினரை இத்துறையில் இருந்து தூரப்படுத்தியுள்ளது. இப்பிரிவினரை ஏழை தொழிலாளர் வர்க்கம் என்று அடையாளப்படுத்த முடியும். இவர்களின் சமூகப் பொருளாதார நிலை மிக மோசமாகக் காணப்படுவது டன், இவர்களின் வாழ்க்கை தொழிற்சங்க அரசியல் சம்பள அதிகரிப்புப் போராட்டம் என தொடர்கின்றது.



அந்தவகையில் இன்று தோட்டங்களில் தொழில் செய்யும் பிரிவினரை விட தொழில் செய்யாத பிரிவினரின் எண்ணிக்கை மிக அதிகமாக காணப்படுகின்றது. இவர்களின் தொகை அண்ணளவாக 550,000- 600,000 லட்சமாகக் காணப்படுகின்றது. இவர்களில் முதியவர்கள், இளைஞர் கள், பாடசாலை செல்வோர், பெண்கள், சிறுவர்கள் என பலர் அடங்குவர். இதில் 50 சதவீதமானவர்கள் தமது குடியிருப்புகளை தோட்டங்களில் வைத் துக்கொண்டு வாழ்வாதாரத்தினை தோட்டங்களிலும் (விவசாயம்) மற்றும் தோட்டங்களை அண்டிய நகரங்களிலும் கிராமங்களிலும் தொழில் செய்து வருகின்றார்கள் (நாற்கூலித் தொழில், கடைகள், கட்டுமானத்துறை, உணவகங்கள், மரக்கரித் தோட்டங்கள் என). இவர்களின் மாத வருமானம் சுமார் 25, 000 - 40,000 மாகவே காணப்படுகின்றது. ஆகவே, இவர்களை கீழ் வர்க்க மக்களாக குறிப்பிடலாம். ஆகவே, இதன் மூலம் வெளிப்படுவது யாதெனில் பெருந்தோட்டத்தில் குடியிருப்புகளை வைத்துக் கொண்டு வாழும் மலையக மக்களின் தொகை சுமார் 740,000 காணப்படுகின்றது. இதில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சிங்களவர்களும் முஸ்லிம்களும் அடங்குவர். அந்தவகையில் தோட்டத்தொழில் துறையினை சாராது பெருந்தோட்டக்கட்டமைப்புக்குள் வாழும் பிரிவினரின் தொகை மிக வேகமாக வளர்ச்சிய டைந்து வருகின்றது. இவர்கள் மத்தியில் காணியுரிமைக்கான கோரிக்கைளும் தாகமும் மிக அதிகமாகக் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. காரணம் நிரந்தர வாழ்வாதாரத்துக்கான வேட்கையாகும் - இது நீண்ட காலத்தில் மிகவும் ஒழுங்குப்படுத்தப்பட்ட தொடர் போராட்டங்களுக்கு வழிசெய்யும். அதற்கு தற்போதைய பொருளாதார சுமை மற்றும் அதனோடு ஒட்டிய பிரச்சினைகள் தூண்டுதல் அளிக்கும்.

தோட்டங்களில் தொழில் செய்யாத பிரிவினரில் சுமார் 100,000 பேர் (அண்மைய கணக்கெடுப்பொன்றிற்கமைய) தோட்டங்களில் தற்காலிக தொழிலாளர்களாக, நாள் சம்பளத்தினை மாத்திரம் பெற்று தொழில் செய்து வருகின்றார்கள் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில் சுமார் 50,000 பேர் தோட்டங்களில் இருந்து ஓய்வுப்பெற்ற மிகுந்த அனுபமுள்ள தொழிலாளர்கள். இவர்களில் பலர் தாம் வாழும் தோட்டங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள வேறு தோட்டங்களுக்கும் நாள் சம்பளத்துக்காக தொழிலுக்குச் செல்கின்றார்கள். பிறிதொரு பகுதியினர் இளம் வயது தொழிலாளர்கள் - இவர்கள் குடும்ப பொறுப்புகளின் காரணமாக தோட்டங்களைவிட்டு வெளியில் சென்று தொழில் செய்ய முடியாத காரணத்தால் தற்காலிக, பதிவு செய்யப்படாத தொழிலாளர்களாக காணப்படுகின்றார்கள். இவர்களுக்கும் சம்பளத்தினை தவிர வேறு எந்த நன்மைகளும் கிடைப்பதில்லை. தோட்டக்கம்பனிகளுக்கு இது கொள்ளை இலாபமாக அமைந்துள்ளதுடன், இதன் காரணமாக தொழிற்சங்க அழுத்தங்கள் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை என்பன பெரியளவில் குறைவடைந்துள்ளன. இவை பெருந்தோட்டக் கட்டமைப்பில் நாம் அவதானிக்கக் கூடிய சில முக்கியமான மாற்றங்களாகும். இவர்களில் அதிக எண்ணிக்கையினருக்கு நிர்ணயிக்கப்பட்ட 1000 ரூபா சம்பளம் வழங்கப்படுவதில்லை. இதில் ஓய்வுப் பெற்ற தொழிலாளர்களே அதிகம் அடங்குவர்.

**கீழ் மற்றும் மேல் மத்தியத்தர வகுப்பு**

கல்வி ரீதியான அடைவுகளின் காரணமாக எழுச்சிப் பெற்றுள்ள இரண்டு வகுப்புகளே இவையாகும். அந்தவகையில் கீழ் மத்தியத்தர வகுப்பில் ஆசிரியர்கள், அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், கிராம சேவகர்கள், சமுர்த்தி அதிகாரிகள், தாதியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அரச சார்பற்ற நிறுவனம், வங்கித் துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் இடைநிலை பதவி நிலைகளில் இருப்பவர்கள் அடங்குவர். இதில் சுமார் 14,000 ஆசிரியர்கள், 600க்கு மேற்பட்ட அதிபர்கள், 800 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனக் காணப்படுகின்றனர். இப்பிரிவினர் பெற்றுக்கொள்ளும் வேதனத்தினை அடிப்படையாகக் கொண்டு இவர்களை கீழ் மத்தியதர வகுப்பினர் என குறிப்பிட முடியும் (**lower middle class**). இவர்கள் ஒரு ஆதிக்கம் மிக்க சக்தியாக இச்சமூகத்தில் வளர்ச்சியடைந்துள்ளார்கள். இப்பிரிவினரின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரித்து வருவதனை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது. இதற்கு பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் (ஆண்டுக்கு சராசரியாக 700 பேர்) மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் ஏற்பட்டுள்ள விரிவாக்கம் என்பன காரணமாகும். சுமார் 9000 -10,000 பேர் இன்று மலையகத்தில் உயர் தரப்பரீட்சைக்கு தோற்றுகின்றார்கள். இப்பிரிவினரில் கணிசமானவர்கள் தோட்டக்கட்டமைப்புக்குள் தமது குடியிருப்புகளை வைத்திருப்பவர்களாகவும் (சுமார் 60 வீதம்), ஏனையோர் தோட்டங்களைவிட்டு வெளியேறி நகரங்களையும் கிராமங்களையும் அண்டி தமது குடியிருப்புகளை அமைத்துக்கொண்டுள்ளார்கள். இதில் அதிக எண்ணிக்கையினர் வாடகை குடியிருப்புகளில் வாழந்து வருகின்றார்கள். ஆகவே, கல்வி கற்றவர்கள் படிப்படியாக தோட்டங்களை விட்டு வெளியேறுவது இன்னொரு போக்காகக் காணப்படுகின்றது. அதற்கு தொழில், வெளி உலகத் தொடர்பு, அந்தஸ்த்து மற்றும் தமது பிள்ளைகளின் கல்வி போன்ற காரணிகளும் செல்வாக்கு செழுத்துகின்றன. இவர்களுக்கும் தோட்டக்கட்டமைப்பில் வாழும் மக்களுக்குமிடையிலான தொடர்பு குறைந்து செல்வதனையும் அவதானிக்க முடியும். இப்பிரிவினரில் உள்ளடக்க வேண்டிய இன்னொரு தரப்பினர் யார் எனில் 23 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும், அரசுக்குச் சொந்தமாக தோட்டங்களில் (மொத்தமாக 423 தோட்டங்களில்) சுமார் பத்து மாவட்டங்களில் தோட்ட நிர்வாக பணிகளில் இருக்கும் (மேற்பார்வையாளர்கள், லிகிதர்கள், தொழிற்சாலை உத்தியோகத்தர்கள்) என்போர் ஆகும். இவர்களின் எண்ணிக்கை தொடர்பான சரியான தரவுகள் இல்லாவிட்டாலும், 2500 - 3000 என மதிப்பிட முடியும்.

அடுத்ததாக இச்சமூகத்தில் ஒரு சிறு எண்ணிக்கையில் எழுச்சிப்பெற்றுள்ள மேல் மத்தியத்தர வகுப்பினரை (**upper middle class**) அடையாளம் காண முடியும். இந்தப் பிரிவில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், அரச நிர்வாகத்தில் உயர் பதவி நிலைகளில் இருப்பவர்கள் (இலங்கை நிர்வாக சேவை, திட்டமிடல் சேவை, கல்வி நிர்வாக சேவை, கணக்காளர் சேவை) வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கித்துறை, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறைகளில் நிறைவேற்று பதவிகளில் இருப்பவர்கள் என்போரைக் குறிப்பிட முடியும். தோட்ட முகாமையாளர்களாக விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் வந்திருந்தாலும் அப்பதவிகள் இன்றும் 99 வீதம் வேற்று சமூகத்தர்களாலேயே ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. மேற்கூறிய பிரிவில் அடங்குவோரின் மொத்த எண்ணிக்கை 700 என மதிப்பிட முடியும். இச்சமூகத்தின் உண்மையான வளர்ச்சிக்கு இவ்வகுப்பினரின் பங்களிப்பு பெரிதும் அவசியமாகும். சமூக நிலை மாற்றத்தில் இவர்களுக்கும் பெரிய பொறுப்புண்டு. இப்பிரிவினரின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இச்சமூகத்தில் மேல் நோக்கிய நகர்வு அதிகரிக்கும். இப்பிரிவினரில் 75 வீதமானவர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறி தமது குடியிருப்புக்களை தாம் தொழில் செய்யும் இடங்களிலும் அல்லது நகரங்களிலும் அமைத்துக் கொண்டுள்ளார்கள். இவர்களுக்கும் தோட்ட சமூகத்துக்குமான தொடர்பு வேகமாகக் குறைவடைந்து செல்கின்றது. அந்தவகையில் கடந்த 200 ஆண்டுகளில் இச்சமூகத்தில் இருந்து உருவாகியுள்ள தொழில் வல்லுனர்களின் எண்ணிக்கை எவ்வளவு, அதனை எவ்வாறு அதிகரிப்பது மற்றும் அதற்கான உபாயங்கள், திட்டங்கள் என்ன என்பது பற்றியக் கலந்துரையாடல்கள் 200க்குப் பின்னரான மலையக சமூகத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பிரதான அம்சமாக அமைய வேண்டும்.

**வர்த்தக வகுப்பினர்**

மலையகத்தில் எழுச்சிப் பெற்றுள்ள பிறிதொரு பிரிவினராக வர்த்தக சமூகத்தினரைக் குறிப்பிட முடியும். இந்த வர்த்தக சமூகத்தில் ஒரு பிரிவினர் மேல் மத்திய தர வர்க்கத்திற்குள்ளும் பிறிதொரு பிரிவினரை மேல் வர்க்கம் (**upper class**) அல்லது வர்த்தக உயர் குழாம் (**business elites**) எனவும் அடையாளப்படுத்த முடியும். இவ்வகைப் பாட்டினை இவர்களின் வியாபாரத்தின் அளவு, தன்மை, வீச்சு, அல்லது விரிவாக்கம், செல்வம், இலாபம் என்ற அடிப்படையில் வகைப் படுத்தலாம். கொழும்பு, கண்டி, பதுளை, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள நகரங்களில் இவர்கள் செல்வாக்கு மிக்க பிரிவினராக காணப்படுகின்றனர். அரசியல் ரீதியாகவும் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள். தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளுக்கு பிரசார நிதியினை வழங்கி அதன் ஊடாக அரசியல் செயற்பாடுகளில் ஆதிக்கம் செழுத்துகின்றார் கள். விசேடமாக கொழும்பில் செட்டியார்தெரு மற்றும் வேறு இடங்களில் ஒட்டுமொத்த வியாபாரமும் இவர்க ளின் ஆதிக்கத்திலேயே காணப்படுகின்றது. இவர்களின் குடியிருப்புகள் நகரங்களை மையப்படுத்தியதாகக் காணப் படுவதுடன், மலையக மக்களுக்கு ஒரு சில தொண்டு வேலைகளை செய்து வருகின்றார்கள். உதாரணமாக: மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தினைக் குறிப்பிட முடியும். எல்லா வர்த்தகர்களும் மலையக சமூகத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்றார்களா என்ற கேள்வியும் உண்டு. ஆயினும், சிலர் தனிப்பட்ட ரீதியாக வும், அமைப்பு ரீதியாகவும் பல வழிகளில் உதவி வருகின் றார்கள். இவர்களும் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் எனலாம். மேலும் மலையகப் பிரதேசங்களில் சிறு அள விலான வியாபார செயற்பாடுகளில் ஈடுபடும், (உதாரண மாக, கம்பளை, நாவலப்பிட்டி, பசறை, புஸ்ஸல்லாவ, ஹட்டன், நுவரெ லியா, கொட்டகலை, பண்டாரவளை, யட்டியன்தொட, பலாங்கொட) பெரும் எண்ணிக்கை யிலான ஒரு வர்த்தக பிரிவினர் காணப்படுகின்றனர். இவர் களின் எண்ணிக்கை தொடர்பான சரியான கணக்கெ டுப்பு இல்லை. இவர்களில் 90 வீதமானவர்கள் தமது குடியிருப்புகளை நகரங்களை அண்டியே அமைத்துக் கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தககது. சுமார் 20,000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் இதில் அடங்கும்.

வர்த்தக வகுப்பில் இரு பிரிவினரை அவதானிக்க முடியும் - ஒன்று உயர் சாதி பின்புலத்தினைக்கொண்ட பரம்பரை பரம்பரையாக வர்த்தகத்தில் ஈடுபடும் செல்வந்தர்கள். இவர்கள் இந்தியாவுடன் மிக நெருங்கியத் தொடர்பினைக் கொண்டுள்ளதுடன், அங்கு வர்த்தகம் மற்றும் சொத்துக்களையும் கொண்டுள்ளார்கள். இவர்கள் இந்திய நலனை அதிகம் பிரநிதித்துவம் செய்யும் தரப்பாகவும் காணப்படுகின்றார்கள். இவர்கள் வர்த்தக உயர் குழாம் என்ற அந்தஸ்த்தினை தொடரந்தும் பேணி வருகின்றார்கள். பி.ஏ.காதர் மற்றும் பி.பி.தேவராஜ் போன்றோர் குறிப்பிடுவது போன்று 1920களில் ஒட்டுமொத்த கொழும்பு வர்த்தகமும் இந்தியத் தமிழர்களின் கட்டுப்பாட்டிலேயே காணப்பட்டுள்ளது. இது சிங்களவர்கள் மத்தியில் இந்திய எதிர்ப்புவாதம் மேற்கிளம்புவதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. 1940 மற்றும் 50கள் ஆகும்போது இது உச்சத்தினைத் தொட்டது. இதன் பிரதிபலிப்புகள் சிங்கள சமூகத்திலும் ஆட்சியாளர்கள் மத்தியிலும் பல வடிவங்களில் வெளிப்பட்டது. அதன் உச்சமே குடியுரிமைச் சட்டம், வாக்குரிமைச் சட்டம் மற்றும் சிறிமா - சாஸ்த்ரி ஒப்பந்தம் என்பனவாகும். இச்சட்டங்கள் கொண்டுவரப்படுவதற்கு வேறு பல அரசியல் காரணிகளும் பெரியளவில் செல்வாக்கு செழுத்தியமையினையும் மறுதலிக்க முடியாது. இதன் விளைவாக இலட்சக்கணக்கான இந்திய தமிழ் வர்த்தகர்கள் பாதுகாப்பு காரணமாக தாயகம் திரும்பினார்கள். இதன் பின்னரேயே கொழும்பு மைய வர்த்தகம் ஏனைய சமூகத்தவர்களின் ஆதிக்கத்திற்கு உள்ளாகியது. தாயகம் திரும்பியோரில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வர்த்தக பின்புலத்தைக்கொண்ட சமூகத்தில் செல்வாக்கு மிக்க, மேல் சாதியினைச் சேர்ந்த குடும்பங்களாகும். இதனால் ஏற்பட்ட சாதகமான விளைவு யாதெனில் மலையகத்தில் அதுவரை இறுக்கமாகக் காணப்பட்ட சாதிய முறை சிதைவடைந்தமையாகும். இன்றும் இந்நிலை தொடர்கின்றது. இலங்கைத் தமிழ்ச் சமூகத்துடனும் சிங்களச் சமூகத்துடனும் ஒப்பிட்டு நோக்கும் போது இதனை மேலும் விளங்கிக்கொள்ள முடியும்.

(மறு பக்கம் பார்க்க)

இதில் அடங்கும் இரண்டாவது வர்த்தக பிரிவினர் யாரெனில் 1970 மற்றும் 80களுக்குப் பின்னர் மலையகத்தில் இருந்து கொழும்பை நோக்கிச் சென்று வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபட்டு இன்று பெரும் வர்த்தகர்களாக எழுச்சிப்பெற்றுள்ள தரப்பினர். இவர்களில் உயர் சாதி மட்டுமன்றி, ஏனைய சாதிப் பின்புலத்தினைக் கொண்டவர்களும் காணப்படுகின்றார்கள். இப்பிரிவினருக்கும் மேலே குறிப்பிட்ட முதலாவது வர்த்தக வகுப்பினருக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என சிலர் வாதிடுகின்றார்கள்.

### வடக்கு கிழக்கிற்கு இடம்பெயர்ந்தோர்

அதேவேளை, நாட்டில் அவ்வப்போ தும் தொடர்ச்சியாகவும் இடம்பெற்ற இன வன்முறையின் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களுக்கு இடம்பெ யர்ந்து வாழும் ஒரு பிரிவினரும் இச்சமூகத் தில் காணப்படுகின்ற னர். இவர்களின் தொகை வடக்கில், குறிப்பாக கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சுமார் 1,50,000க்கு மேல் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இவர்கள் வடகிழக்கு சமூகத் துடன் ஒன்றிக்க முடியாது வாழ்ந்து வரு கின்றனர். நிலவுரிமை என்பது தொடரும் போராட்டமாகவே உள்ளது. போர்க் காலங்களில் இவர்கள் எல் லைப்புற கிராமங்களிலேயே வாழ்ந்தார்கள். அத்துடன், தொடர்ந்தும் சமூக மற்றும் அரசு நிறுவனங்களில் பல் மட்ட பாகுபாடுகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்கள் குறித்த ஆய்வுகள் ஒப்பீட்டளவில் குறைவாகும். இவர்க ளில் 75 சதவீதமானவர்கள் விவசாயம், நாள் கூலி, சிறு வியாபாரம் ஆகிய தொழில் களில் ஈடுபட்டு வருகின்ற னர். இங்கும் ஒரு சிறு எண்ணிக்கையில் ஆசிரியர், அரச உத்தியோகம், தனியார் துறை தொழில் செய்வோர் என எழுச்சி பெற்றுள்ளார்கள். இவர்கள் கீழ் மத்தியத்தர வர்க்கத்தில் அடங்குவர். ஆயினும், இவர்களில் பெரும் பகுதியினர் (சுமார் 90 விகிதம்) மிகக் குறைந்த வேதனம் பெறும் கீழ் வர்க்க உழைக்கும் ஏழைத் தொழிலாளர்க ளாகவே காணப்படுகின்றனர். அத்துடன், கிழக்கு மாகா ணத்தில் சுமார் 40,000-50,000 பேர் மலையகத் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என மட்டக்களப்பில் அண்மை யில் இடம்பெற்ற மலையகம் 200 நிகழ்வொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் பெருமளவில் உழைக்கும் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர் - சமூக ஒதுக்கல் மற்றும் பாகுபாடுகளுக்கும் (காணி, அரச சேவைகள், வீடு, வாழ்வாதரம் போன்ற விடயங்களில்) உள்ளாகியுள்ளனர். இங்கு குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு அம்சம் யாதெனில் வடக்கில் வாழும் மலையகத் தமிழர்கள் (குறிப்பாக கிளிநொச்சி மற்றும் வவுனியா) இன்றுவரையில் மாத்தளை மாவட்டத்துடன் நெருங்கியத் தொடர்பினைக் கொண்டிருப்பதனையும், மட்டக்களப்பில் வாழும் மலையகத் தமிழர்கள் பதுளை மாவட்டத்துடன் வர்த்தக, திருமண மற்றும் குடும்ப உறவுகளைப் பேணி வருவதனையும் அவதானிக்க முடியும்.

### முறைசாரா தொழில் துறை



இன்னொரு முக்கியமான பிரிவினர் பிரதான நகரங்களில் முறைசாரா தொழில் துறைகளில் தொழில் செய்யும் இளைஞர்கள், யுவதிகள் ஆகும். கொழும்பில் உள்ள ஆடைத்தொழிற்சாலை, கட்டுமானத்துறை, உணவகங்கள், கடைகள், தொழிற்சாலைகள், வீட்டு வேலை, முச்சக்கர வண்டி, சாரதிகள் என ஒரு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் உள்ளனர். இவர்கள் தொடர்பான சரியான புள்ளிவிபரங்கள் யாரிடமும் இல்லை. ஆயினும், சுமார் 100,000 பேர் வரையில் தொழில் செய்கின்றார்கள் என மதிப்பிடுகின்றோம். இவர்கள் மிகக் குறைந்த ஊதியத்திற்கு நாட்கூலிகளாக தொழில் செய்கின்றார்கள். சிலர் மாதச் சம்பளம் பெறும் தொழில்துறைகளில் உள்ளனர். அதிகமானோர் பாதுகாப்பற்ற தொழில்துறையில் இருப்பதுடன் மிக மோசமான தொழில் சுரண்டல், பாதுகாப்பற்ற தங்குமிடங்கள், உரிமை மறுப்பு, சுகாதாரப் பிரச்னைகள், பாதுகாப்பின்மை, துஸ்பிரயோகம் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு உள்ளாகி உள்ளனர். இது தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட தகவல்கள் பொதுவில் கிடைக்கக்கூடியதாக இல்லை. இவர்களின் 75 வீதமானவர்கள் தொழில் திறன் எதுவும் இல்லாதவர்கள் ஆகும். மலிவு ஊழியம் என்று கூற முடியும். இவர்களின் சமூக - பொருளாதார மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக எந்த ஆய்வுகளும் இதுவரையில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே, இப்பிரிவினர் தொடர்பாக பெரியளவிலான தகவல் திரட்டல் மற்றும் ஆய்வுகள் அவசியம். அது இப்பிரிவினர் எதிர்கொள்கின்ற அடிப்படையான பிரச்னைகளுக் குத் தீர்வு காண உதவும்.

அத்துடன், மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து தொழிலுக்காக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பல இடங்களுக்கு சென்று (உதாரணம்: வத்தளை) பின் னர் அங்கு நிரந்தரமாகவே குடியேறி யுள்ள பிறிதொரு பிரிவினரும் உள்ள னர் -இவர்களில் 80 வீத மானவர்கள் உப நகரங்களில் வாழ்ந்து வருகின்றார் கள் (உதாரணமாக: மாளிகாவத்தை, கொடஹேன, தெமட கொட). இவர்களின் தொகை சுமார் 200,000க்கு மேல் இருக்கும் என மதிப்பிடப்படுகின்றது. இவர்களில் 90 வீதமானவர்கள் முறைசாரா தொழில்களிலேயே ஈடுபட்டுள்ளனர். இப்பிரிவினரில் அடக்கவேண்டிய இன்னொரு பகுதியினர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் செய்யும் மலையகப் பெண் கள் ஆகும். இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக ஒரு விரிவான ஆய்வறிக்கையொன்று கொழும்பில் அமைந்துள்ள இனத்துவக் கற்கைகளுக் கான சர்வதேச நிறுவனத்தினால் 2022இல் வெளியிடப் பட்டுள்ளது. இது மூன்று மொழிகளிலும் கிடைக்கப் பெறுகின்றது. சுமார் 2500க்கு மேற்பட்ட மலையகப் பெண்கள் மத்தியக் கிழக்கு நாடுகளில் தொழில் செய்வ தாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### நகர சுத்திகரிப்புத் தொழில்

பிறிதொரு பிரிவினராக நகரச் சுத்திகரிப்பு தொழில்களில் ஈடுபட்டு வரும் மக்களைக் குறிப்பிட முடியும். இலங்கையின் பிரதான நகரங்களான கொழும்பு, கண்டி, மாத்தளை, பதுளை, கேகாலை, குருணாகல், இரத்தினபுரி

(நாளை தொடரும்)

